# சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 28வது கூட்டறிக்கை 2020.06.09

சம்மாந்துறை பிரதேச சபையின் 04வது சபையின் 28வது அமர்வு 2020.06.09 ஆம் திகதி செவ்வாய்க் கிழமை காலை 9.30 மணிக்கு சம்மாந்துறை பிரதேச சபையின் சபா மண்டபத்தில் தேசிய கீதம் மற்றும் இறை சிந்தனையுடன் கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட் அவர்களின் தலைமையில் ஆரம்பமானது.

**சமூகமளித்த கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. ஜனாப்.ஏ.எம்.எம். நௌசாட் | கௌரவ தவிசாளர் | அ.இ.ம.கா |
| 02. ஜனாப்.ஏ.அச்சி முஹம்மட் | கௌரவ உப தவிசாளர் | ஸ்ரீ.சு.க |
| 03. ஜனாப்.ஐ.எல்.நஜீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 04. ஜனாப்.எஸ்.எம்.எம்.முஸ்தபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 05. திருமதி.ஆர்.வளர்மதி | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 06. திரு.என்.கோவிந்த சாமி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 07. ஜனாப்.ஏ.சி.முஹம்மட் சஹீல் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 08. ஜனாப்.எம்.ரீ.பௌசுள்ளாஹ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 09. ஜனாப்.ஏ.எம்.எம்.றியாஸ் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 10. ஜனாப்.ஏ.எல்.எம்.ஜிப்ரி | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 11. ஜனாப்.எஸ்.நளீம் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 12. ஜனாப்.ஏ.யூசுப் லெவ்வை | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 13. திருமதி.கே.எம்.இன்பவதி | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 14. திருமதி.எம்.எஸ்.சரீபா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 15. திருமதி.எஸ்.எம்.சித்தி நிலுவ்பா | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |
| 16. திருமதி.கே.எல்.சிஹாமா | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 17. ஜனாப்.வை.பீ.எம்.முஸம்மில் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |

**சமூகமளிக்காத கௌரவ உறுப்பினர்கள்**

| | | |
|---|---|---|
| 01. திரு.வீ.ஜெயச்சந்திரன் | கௌரவ உறுப்பினர் | ஸ்ரீ.சு.க |
| 02. ஜனாப்.யூ.எல்.அஸ்வர் | கௌரவ உறுப்பினர் | அ.இ.ம.கா |
| 03. ஜனாப்.ஐ.எல்.எம்.மாஹிர் | கௌரவ உறுப்பினர் | ஐ.தே.க |

**சமூகமளித்த உத்தியோகத்தர்கள்**

| | |
|---|---|
| 01. ஜனாப்.எம்.ஏ.கே.முஹம்மட் | செயலாளர் |
| 02. செல்வி.ஏ.பீ.ஏ.ஸஹானா | அலுவலக உதவியாளர் |

**கௌரவ தவிசாளர் ஏ.எம்.எம். நௌசாட்**

பிஸ்மில்லாஹிர்ரஹ்மானிர்ராஹீம். எல்லாப்புகழும் இறைவனுக்கே, எல்லோரையும் 04வது சபையின் 28வது அமர்வுக்கு வரவேற்றவனாக,

இவ் அமர்வின் முதல் அம்சமாக கடந்த கூட்டறிக்கை சமர்ப்பித்தலும் அங்கீகாரம் பெறலும். இக் கூட்டறிக்கையில் ஏதாவது திருத்தங்கள் இல்லாவிடில் ஒருவர் ஆமோதிக்கலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் நான் பேசப்பட்ட விடயங்கள் இடம்பெறவில்லையானால் இக் கூட்டறிக்கையில் எனக்கு உடன்பாடு இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பேசப்பட்ட விடயம் என்னவென்று குறிப்பாக கூறினால் உரிய திருத்தங்களைச் செய்யலாம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சென்ற சபையில் இக் கூட்டறிக்கையின் ஆரம்ப பக்கத்தில் அதாவது ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது என்று எடுக்கப்பட்டது. அதன் பிற்பாட்டில் கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் பரிசீலனை செய்து இதைப் பற்றி யோசிக்கலாம் என்ற கருத்து உள்வாங்கப்படுகின்றது. அதன் காரணமாக எனக்கு இக் கூட்டறிக்கை போதிய விளக்கம் இல்லை என்று அறிய தந்தேன். ஆனால் அவ்விளக்கம் தொடர்பாக இதில் இல்லை.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
அக் கருத்து நீங்கள் கூறிய போது உடனடியாக கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் எழுந்து அது எனது கருத்தே தவிர தீர்மானத்திற்கு எதிராக கருத்து சொல்லவில்லை என தெளிவாக சொன்னவுடன் நான் சொன்னேன் அதை விடுங்கள் என்று, அந்த குறிப்பை அவர்தான் ஆட்சேபிக்க வேண்டுமே தவிர நீங்கள் அது வரவில்லை என்று சொல்வது ஏற்றுக்கொள்ள முடியாத விடயம்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நான் தெளிவில்லை என்றுதான் கூறினேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இந்த விரிவான கூட்டறிக்கைக்கு ஒவ்வொரு விடயத்திலும் இவ்வாறு செய்வீர்களானால் மற்ற சபைகளைப் போல் தீர்மானங்களை மட்டும் கூட்டறிக்கையாக எடுத்துவிட்டு உங்கள் எல்லோருக்கும் பதிவீடுகளை தரலாம். நீங்கள் சொன்ன ஒவ்வொரு வார்த்தைகளும் பதிவீட்டில் இருக்கும். ஆனால் அப் பதிவுகள் உங்களுக்கு விளங்க வேண்டும் இச் சபை ஒரு கௌரவ சபையாக நடாத்தப்பட வேண்டும் என்றால் சபையின் பதிவுகள் நீங்கள் உங்கள் விளம்பரங்களுக்காக பாவிக்க கூடாது. நீங்கள் சபைக்குள் எதுவும் கதைக்கலாம். ஆனால் சபையில் கதைத்ததை கொண்டு சென்று இப்படி சொன்னேன் அப்படி சொன்னேன் என்று சொல்வது இச் சபையின் கௌரவத்திற்கு ஒரு பங்கம் விளைவிக்கும் விடயம் என்பதை தெரிவித்துக் கொண்டு, நிங்கள் அப் பதிவினை பார்க்கலாம். கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் இதற்கு ஆட்சேபனை தெரிவிக்காவிட்டால் அதை உள்வாங்கலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, 4வது சபையின் 26வது அமர்விலே சம்மாந்துறை ஆதார வைத்தியசாலைக்காக மாத்திரை பக்கட் வழங்குவதற்கு சம்மாந்துறை பிரதேச சபையின் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்வது தொடர்பாக ஏற்பட்ட விவாதத்தின்போது நான் நினைக்கின்றேன் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் சரியாக விளங்கிக் கொள்ளவில்லை என்று நினைக்கின்றேன். நான் குறிப்பிட்ட விடயம் என்னவென்றால் வைத்தியசாலைக்கு என்று தனியாக ஒரு சுகாதார அமைச்சு இருக்கின்றது, பல்வேறுபட்ட திணைக்களங்கள் இருக்கின்றது. இவைகள் வைத்தியசாலைக்கு பல்வேறுபட்ட நிதிகளை ஒதுக்கீடு செய்கின்றன அதனால் மாத்திரை பக்கட் வழங்குவதற்காக எந்தவிதமான நிதி ஒதுக்கீடுகளும் வரவில்லை என்பதும் நாம் அறிந்த விடயம் அவ்வாறான நிதி ஒதுக்கீடுகள் வராத பட்சத்தில் சபை நிதியில் அதை செய்வதற்கு என்னுடைய பூரண ஆதரவை தெரிவிக்கின்றேன் என்று தான் நான் கூறினேன். அதற்கு மாறாக கடந்த 4வது சபையின் 27வது அமர்விலே கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் அதனை நான் எதிர்த்ததாக கூறி சபையினுடைய கூட்டறிக்கையில் வரவேண்டும் என்று கூறியிருந்தார். என்னைப் பொருத்தவரைக்கும் அவ்வாறான எதிர்ப்பு கருத்தை தெரிவிக்கவில்லை என்று கடந்த சபையிலே தெரிவித்திருக்கிறேன். என்னைப் பொருத்தவரைக்கும் அப்படியான மாற்றம் இக் கூட்டறிக்கையில் தேவை இல்லை என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் கூறியதில் பரிசீலனை என்று கூறப்பட்டுள்ளது அதை கருத்தில் எடுக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

பரிசீலனை என்பது எதிர்ப்பு அல்ல. அவர் தெளிவாக கூறினார் ஒரு கௌரவ உறுப்பினரின் கருத்தை இன்னொரு கௌரவ உறுப்பினர் அதற்கு விளக்கம் கொடுக்கும்போது வருகின்ற பிரச்சினை இதுதான். அவர் முடிவு எடுக்கின்ற போதும் நான் இக் கருத்துக்கு எதிர்ப்பு என்றால் அது எதிர்ப்பு. ஏனையவைகள் கருத்துக்கள். இச் சபை ஆரம்பிக்கும் காலத்தில் இருந்தும் எவ்வளவு மாற்றுக்கருத்துக்கள் சொல்லப்பட்டிருக்கின்றது அது எல்லாவற்றையும் உள்வாங்கி தீர்மானமாக எடுக்கும் போதும் இது சபையின் தீர்மானம் ஆகத்தான் போயிருக்கின்றது. ஏகமனதாக என்று சொல்வது இது சபை எடுத்த முடிவுகளே தவிர தவிசாளரின் திணிப்பில் எடுத்த முடிவு என்பதற்கு இடமில்லை. இதில் எதுவும் தவிசாளர்கள் இதை செய்தார் அதை செய்தார் ஒரு புகழ் எடுக்கவேண்டிய தேவை எனக்கு இல்லை. இச்சபை எது செய்தாலும் சகல உறுப்பினர்களும் சபை என்பது என்னோடு சேர்த்து 20 உறுப்பினர்கள் அதனால் சிறிய முரண்பாடுகளை பெரிதுபடுத்தி நான் இப்படிச் சொன்னேன் நான் சொன்னது வரவில்லை என்று திணிப்பது ஒரு உறுப்பினருக்கு அழகல்ல.

### கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே, பரிசீலனை செய்ய வேண்டும் என்றோ நான் கூறியது எமது கூட்டறிக்கை அல்ல மாத்திரை வழங்குவதற்காக எங்கேயாவது நிதிகள் வந்திருக்கின்றனவா? என்பதை பரிசீலனை செய்து விட்டு சபையினுடைய நிதியை வழங்கலாம் என்று தான் கூறினேன். கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களுக்கு நான் ஒரு விடயத்தை கூறுகின்றேன். என்னுடைய கருத்திற்கு பின்னால் முரண்பாடு செய்ய வேண்டிய தேவைப்பாடு உங்களுக்கு இல்லை நான் கூறிய கருத்தை நானே ஒப்புக்கொண்டேன் நான் எதிர்ப்பு தெரிவிக்கவில்லை கருத்தைத்தான் தெரிவித்தேன் என்று, ஆதரவான கருத்து என்று தான் கூறினேன். ஆகவே அதை நீங்கள் விடுவது உங்களுக்கு நல்லது என்று சபையிலே மிகவும் தாழ்மையாக வேண்டிக் கொள்கின்றேன்.

### கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:

கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களே, ஒரு விடயம் பரிசீலனை செய்வது என்றால் சிறிது கால தாமதம் எடுத்துவிட்டு தான் அதற்கு தீர்மானம் எடுக்க வேண்டும் அப்படி இல்லாவிட்டால் அவ்வார்த்தையை பிரயோகிக்கக் கூடாது.

### கௌரவ தவிசாளர் அவர்கள்:

அம்முடிவை எடுப்பது தவிசாளர் அங்கத்தவர்கள் அல்ல. இதில் நான் தெளிவாக சொல்லுகின்றேன் எல்லா அங்கத்தவர்களும் உங்களது கருத்துக்களை சொல்லலாம் முடிவு எடுப்பது சபையின் அங்கீகாரத்தோடு தான் என்பதை நீங்கள் தெளிவாக விளங்கிக்கொள்ள வேண்டும்.

### கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:

கௌரவ தவிசளர் அவர்களே, கௌரவ உறுப்பினர்கள் உடைய சில அம்சங்களை மறந்து எமது கௌரவ உறுப்பினர்கள் வாதிடுகிறார்கள் சபையில் பேசும்போது ஒரு உறுப்பினர் பேசியதை ஏனைய உறுப்பினர்கள் பேசக்கூடாது என்றும் உறுப்பினர்களின் கருத்துக்கு பின்னால் நாங்கள் எதிர்க் கருத்தை தெரிவிக்கக் கூடாது என்றும் உள்ளூராட்சி மன்றங்களினால் எங்களுக்கு இது பற்றிய வகுப்புகள் நடத்தப்பட்டிருக்கிறது. இவைகளை எல்லா உறுப்பினர்களும் கருத்திற்கொண்டு இச்சபையில் நடக்க வேண்டும் என்பதை நான் உள்ளூராட்சி மன்றங்களின் தலைவி என்ற வகையில் இவ்விடத்தில் கருத்தை தெரிவிக்கின்றேன்.

### கௌரவ தவிசாளர் அவர்கள்:

கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களே, நீங்கள் இவ்வறிக்கைக்கு உடன்பாடு இல்லை என்ற நிலைப்பாட்டில் இருக்கின்றீர்களா? முதல் தடவையாக சம்மாந்துறை பிரதேச சபையின் 2011 ஆம் ஆண்டில் இருந்து வந்த வழக்கம் ஏகமனதாக எடுத்த முடிவு கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் இதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று கூறியதனால், இதற்கு சார்பாக கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களைத் தவிர ஏனைய அங்கத்தவர்கள் இதை ஆதரித்ததாக முடிவெடுக்கவா? சம்பிரதாயம் இன்று முறிக்கப்பட்டுள்ளது. அப்பெருமை கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களுக்கு சேரும்.

கௌரவ உறுப்பினர் அவர்களே, நீங்கள் எல்லோரும் விளங்க வேண்டிய விடயம் இச்சபை ஒரு அரசியல் களம் அல்ல இந்த சபை ஒவ்வொரு உறுப்பினர்களும் அவர்கள் மற்றவர்களைவிட திறமையானவர்கள் சக்தி உள்ளவர்கள் என்று காட்டும் ஒரு தளமாக இவ்வளவு காலமும் பாவிக்கப்படவில்லை. ஒருங்கிணைத்து தங்களுக்கு உள்ள திறமைகளை இச்சபைக்குள் வெளிக்காட்டி உங்கள் பங்களிப்போடு திறமை தேடித்தந்த சபையாக இருந்து வந்திருக்கின்றது. அதை நாம் தொடர்ந்தும் பேண வேண்டும் என்பது எனது பணிவான

வேண்டுகோளாகும். நான் இன்று இந்த முடிவை மன வருத்தத்துடன் எடுத்ததற்கு காரணம் மீண்டும் ஒரு தரம் இச்சபை என் கருத்துக்கு இடம் தரவில்லை என்று கூறாமல் அவர் அதை ஏற்றுக்கொள்ளவில்லை இங்கு இருக்கும் ஏனைய உறுப்பினர்கள் ஏற்றுக்கொண்டார்கள். எனவே பெரும்பான்மையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது என்பதை குறிப்பது ஒரு வேதனைக்குரிய விடயம் ஆனால் ஒரு கையில் ஐந்து விரல்களும் ஒரு வடிவத்தில் இருப்பதில்லை அதனால் அதை ஏற்றுக் கொண்டவனாக,

### தீர்மானம் - 04/28/01

சென்ற மாதக் கூட்டறிக்கை கௌரவ தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரி.பௌசுள்ளாஹ் |

கூட்டறிக்கை சபையில் ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இன்று இந்நாட்டில் சபைகளுக்கு மட்டுமல்லாமல் அரசுக்கு அரச நிறுவனங்களுக்கு எதிர்காலத்தை எப்படி எதிர்கொள்வது என்ற பாரிய சவால் இருக்கின்றது. அதில் நிதி ஒரு பெரிய பங்கை அளிப்பது. இந்த வருடம் 5ம் மாதம் முடிவில் நாம் முழுமையாக மதிப்பீடு செய்த வருமானத்தில் இன்றுவரை அல்லது மே மாதம் முடிவு வரை 24 வீதத்தைதான் நாம் பெற்றிருக்கின்றோம். நாம் முழு வருடத்திற்கும் எதிர்பார்த்த வருமானத்தில் 19 மில்லியன் 762 இலட்சம் அதாவது 24 வீதத்தைதான் அடைந்திருக்கின்றோம். ஆனால் இதில் நாம் வெளியில் இருந்து நமக்கு வரவேண்டிய முத்திரைத்தீர்வு 14 மில்லியன் நாம் மதிப்பீடு செய்திருந்தோம். அதில் 10.7 மில்லியன் நமது கையில் வந்து சேர்ந்துவிட்டது. அது ஒரு மகிழ்ச்சிகரமான விடயம். அது நிச்சயமாக நமது நடவடிக்கைகளுக்கு பெருமளவில் உதவும். நமக்கு இருக்கும் சவால்கள் வரி வாடகை, Courts fine எமது கையில் இல்லை. ஆனால் அதுவும் ஓரளவு வருட முடிவுக்குள் வந்து சேரும் என்ற நம்பிக்கை இருக்கின்றது. இன்று இருக்கும் சூழலில் நாம் வரி அறவிடுவது எப்படி? ஆரம்ப காலத்தில் கௌரவ உறுப்பினர்கள் அதில் பங்கேற்று அதை செயற்படுத்த வேண்டும் என்ற முடிவுக்கு வந்தோம். ஆனால் துரதிஸ்டவசமாக முதல் 03 மாதங்களில் அதை செயற்படுத்துவதற்கு நமது பதிவீடுகளை ஒழுங்குபடுத்துவதில் இருந்த பிணக்குகளினால் அதை எமக்கு செயற்படுத்த முடியவில்லை. பின்னர் நாம் Covid 19 வைரஸ் தாக்களினால் மூடப்பட்ட பின்பு நமக்கு எதுவும் செய்ய முடியாத நிலைக்கு தள்ளப்பட்டோம். இறைவன் நாடினால் இன்சா அல்லாஹ் 7வது மாதத்திலாவது நாம் முயற்சி ஒன்று செய்ய வேண்டும். அதில் கௌரவ உறுப்பினர்கள் அவர் அவர்களின் வட்டாரங்களில் பங்களிப்பு செய்ய வேண்டும் என்று உங்களிடம் பணிவாக வேண்டிக் கொள்கின்றேன்.

உங்களின் ஒற்றுமையோடு இன்று இச் சபை ஏனைய சபைகள் பொறாமைப்படும் அளவுக்கு நாம் எந்த நிதி நெருக்கடியும் இல்லாமல் இயங்கிக் கொண்டு வருகின்றோம். நிதி முகாமைத்துவம் அத்தியவசியம் என்பது நீங்கள் எல்லோரும் ஏற்றுக் கொள்ளும் விடயம். Covid 19 வைரஸினால் பாரிய அளவு இவ் ஊர் மட்டுமல்லாமல் முழு நாடும் பாதிக்கப்பட்ட நிலையில் நீங்கள் ஆர்வம் காட்டியும் சபை என்ற ரீதியில் நாம் பொது மக்களுக்கு நேரடியாக உலர் உணவு உதவிகள் செய்யாததன் காரணம் நான் பல தடவை கூறியிருக்கின்றேன். ஆனால் வருகின்ற காலங்களில் நாம் எப்படி இம் மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்த முடியும் என்ற பொதுவான வேலைத்திட்டங்களுக்கு நாம் இறங்க வேண்டி இருக்கும். அதில் முக்கியமாக இவ் வீட்டுத் தோட்டங்கள், சுய தொழில் முயற்சிகள் போன்ற விடயங்களில் நாம் ஒரு பொதுவான ஒரு திட்டத்தை உருவாக்கி ஒவ்வொரு கௌரவ உறுப்பினர்களும் வெவ்வேறாக இயங்காமல் ஒரு பொதுவான திட்டத்தை உருவாக்கி அந்தந்த திணைக்களங்களுடன் சேர்ந்து கௌரவ உறுப்பினர்களின் வழிகாட்டலில் அப்படியான செயற்திட்டங்களை எதிர்காலத்தில் செய்வதற்கு நாம் திட்டமிட வேண்டும். அந்த திட்டமிடல் குழுவிற்கு கௌரவ உப தவிசாளர் அச்சி முஹம்மட் அவர்கள் தலமை தாங்கி எல்லா உறுப்பினர்களும் சேர்ந்து அவரின் தலமையில் எப்படி இதை ஒழுங்குபடுத்தலாம் என்ற ஒரு திட்டத்தை உருவாக்கி அடுத்த அமர்வுக்கு சமர்ப்பித்தால் நாம்

வருகின்ற 06 மாதங்களில் எமது நிதி நிலையைப் பார்த்து கட்டம் கட்டமாக அதை செயற்படுத்துவதற்கு நாம் முயற்சிகளை செய்யலாம்.

செலவீனங்களை அங்கீகாரத்துக்காக சமர்ப்பிக்கின்றேன். அதில் ஏதாவது விளக்கங்கள் தேவைப்பட்டால் அதனைக் கேட்கலாம்.

**தீர்மானம் - 04/28/02**

சென்ற மாதம் 2020.05.01 தொடக்கம் 2020.05.31 வரையிலான செலவீனங்களும் மற்றும் கொடுப்பனவுகளுக்குமான செலவு விபரங்களுக்கு அனுமதி வழங்குவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக அனுமதிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இச் சபைக்கான ஒரு தனியான அங்கீகாரம் இருக்கின்றது. தனியான கௌரவம் இருக்கின்றது. எனவே இன்று எமது கௌரவ உறுப்பினர்களுக்கிடையிலான கலந்துரையாடல்கள் இருக்கின்ற படியினால் இச் சபைக்கு இன்று ஊடகங்களுக்கோ, பொதுமக்களுக்கோ அனுமதி வழங்குவதை இரத்துச் செய்யுமாறு மிகவும் தாழ்மையாக கௌரவ தவிசாளர் அவர்களிடம் கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இன்னும் ஒருவரும் வரவில்லை. அப்படி வந்தால் அதை கவனத்தில் எடுப்போம்.

கட்டாக்காலி மாடுகள் தொடர்பாக பொதுவான அபிப்பிராயம் என்னவென்றால் மாட்டுச் சொந்தக்காரர்களுக்கு நாம் விதிக்கும் தண்டப்பணம் மிகக் குறைவாக காணப்படுகின்றது. அதை உண்மையாக சட்டப்படி இரண்டு விதத்தில் செய்யலாம். ஒன்று, பிடிபடும் மாடுகளை மேய்ச்சல் தரவைக்கு அனுப்புதல். இதனால் சொந்தக்காரர்களுக்கு மீண்டும் இதனை பெற்றுக் கொள்ள முடியாத நிலை. அடுத்தது தண்டப்பணத்தை அதிகரிப்பது. அவ்வாறு அதிகரிப்பது என்றால் எவ்வளவுக்கு அதிகரிப்பது என்பதை இச் சபை தீர்மானிப்பது சிறப்பாக இருக்கும்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையை பொறுத்தவரையில் அதிகளவான வருமானம் மாடு வளர்ப்பவர்களுக்கு வருகின்றது. பாலாகவும், இறைச்சியாகவும் விற்பதனால் அதிகளவான வருமானம் வருகின்றது. எமது சபையினால் கடந்த சபையில் எடுத்த தீர்மானம் ரூபா 1000/- உம், ரூபா 500/- உம் என்று எடுத்தோம். அது மிகவும் சிறிய தொகை என்பதால் மாடு வளர்ப்பவர்கள் அதை அலட்சியமான முறையில் எமது சபையின் தீர்மானத்தை மரியாதைக் குறைவாக நினைத்து அம் மாடுகளை கண்ட மாதிரி அதை திறந்து விடுகின்றார்கள். இதற்குரிய தீர்மானம் எப்படி எடுக்க வேண்டும் என்றால் மாட்டின் 1/3 பங்கு பணத்தை சபை அறவிட வேண்டும். கௌரவ தவிசாளர் அவர்களே இவ் ஊரை அழகு படுத்துவது என்றால் அவர்களும் பங்களிப்பு செய்ய வேண்டும். தெரு ஓரங்களில் மாடுகள் சாணங்களை போட்டு விட்டு செல்கின்றது. வீதிகளை துப்பரவு செய்ய வேண்டுமானால் அவ் வீட்டுக்குரியவர்கள்தான் துப்பரவு செய்ய வேண்டும். அம் மாடுகளால் வருகின்ற இலாபங்களை மட்டுமே அவர்கள் அனுபவிக்காகளே தவிர அம் மாடுகளால் வருகின்ற தீமைகள் அவர்களை போய் சேருவதில்லை. இல்லையென்றால் மேய்ச்சல் தரவைக்கு இட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதை ஒரு கண்டிப்பான தீர்மானமாக எடுக்க வேண்டும் என்பது எனது தாழ்மையான கருத்து.

**கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, பெரிய மாட்டிற்கு ரூபா 5000/- உம் சிறிய மாட்டிற்கு ரூபா 2500/- உம் அறவிடுவோம்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சிறிய மாடு, பெரிய மாடு என்றில்லாமல் மாட்டிற்கு ரூபா 5000/- விதித்தால் நல்லது என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, தற்போது நாட்டின் நிலமைக்கு காட்டில் கூட மாடு மேய்க்க விடுகிறார்கள் இல்லை. ஏனென்றால் யானைக்கு உணவு இல்லை என்று, அப்படி இருக்கும் போது இவர்கள் நகரத்தில் விடுகின்றார்கள். ஒரு மாட்டிற்கு ரூபா 5000/- இற்கு மேலாக அறவிட்டாலும் எந்தப் பிரச்சினையும் இல்லை.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துரையைப் பொருத்தவரையில் கட்டாக்காலி மாடுகளினுடைய பிரச்சினை மிகவும் அதிகமாக உள்ளது. என்னைப் பொருத்தவரைக்கும் இவர்களுக்கு தண்டம் அறவிடுவது இச் சபையினால் செய்ய முடியாத காரியம் என்பதுதான் மாட்டுக்காரர்களுடைய சிந்தனை. ஏனென்றால் 2 நாள் அல்லது 3 நாள் நாம் மாட்டை மீளப்பெற்றுக்கொள்ளப்படாவிட்டால் இதனை அவர்களால் பராமரிக்க முடியாது ஆகவே இதை நாம் கவனத்திற் கொள்ள தேவையில்லை என்ற எண்ணப்பாடுதான் மாட்டுச் சொந்தக்காரர்களுடைய என்னம். ஆகவே இவர்களுக்கு என்னுடைய கருத்து முன்னறிவித்தலாக கட்டாக்காலியாக திரிகின்ற மாடுகள் ஒன்று சபைக்கு சொந்தமான பொருளாக மாற்றப்படும். அல்லது அரச உடமையாக்கப்படும் என்ற ஒரு தகவலை சம்மாந்துறை பூராகவும் இச் சபையினூடாக அறிவித்தால் நல்லது என்று நினைக்கின்றேன். அவ்வாறு எமது சபையின் கட்டளைச் சட்டங்களின் படி ஒரு நியதி இருக்குமாயின் அதனை மேற்கொண்டால் நல்லது என்பது எனது கருத்து.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
இதில் மிருகங்களை பொறுத்தவரையில் சபையின் சொத்தாக நாம் மாற்றும் போது முழு பராமரிப்பு பொறுப்பும் சபைக்கு வரும். செய்ய முடியாமல் இல்லை சட்டத்தில் நாம் ஒரு பரீட்சாத்தமான ஒரு பண்ணை நடத்தலாம். ஆனால் அது பாரிய ஒரு பொறுப்பு. இன்றைக்கு சம்மாந்துறையில் அப்படியான இடவசதிகள் கூட இல்லை. கௌரவ உப தவிசாளர் அவர்களும் நானும் பாம் வட்டைப் பிரச்சினையில் புரணாக இருக்கும் ஏறத்தாள 10,18 ஏக்கர் காணிகளை ஒரு மேய்ச்சல் தரவையாக ஒதுக்கப்பட்டு இந்த மாடுகள் அங்கு கொண்டு செல்லப்பட வேண்டும் என்ற ஒரு முயற்சியில் இறங்க வேண்டும் என்று நாங்கள் பேசிக்கொண்டோம். நீங்கள் ஒத்துழைப்பு வழங்கினால் நாம் அறிவித்தல் ஒன்று விடுவோம் இனிமேல் கட்டாக்காலி மாடுகள் சபையினால் பிடிக்கப்படும் பட்சத்தில் 03 நாளைக்குள் அதற்குரிய தண்டப்பணத்தை செலுத்தி விடுவிக்கப்படாவிட்டால் இது சட்டத்தின்படி உரிய நடவடிக்கைகளுக்காக பொலிசாரிடம் ஒப்படைக்கப்படும் என்ற ஒரு அறிவித்தலை கொடுக்கலாம். பொலிசாரிடம் ஒப்படைக்கப்பட்டவுடன் அது பண்ணைக் காணிக்கு அனுப்பப்படும். அவர்களுக்கு தெரியும் பிடிபட்டால் நாள் ஒன்றுக்கு ரூபா 5000/- உம் 03வது நாள் எடுக்காவிட்டால் 4வது நாள் உத்தியோகபூர்வமாக பொலிசாரிடம் ஒப்படைப்போம்.

**தீர்மானம் - 04/28/03**
கட்டாக்காலி மாடுகள் சபையினால் பிடிக்கப்படும் பட்சத்தில் ஒரு மாட்டிற்கு நாள் ஒன்றுக்கு ரூபா 5000/= அறவிடுவதுடன், 03 நாட்களுக்குள் மாடுகளை உரிமையாளர் பெறாவிட்டால் பொலிஸாரிடம் ஒப்படைத்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

எமது நிரந்தர ஊழியர்கள் எல்லோருக்கும் Agrahara என்ற ஒரு Insurance திட்டத்தின் கீழ் அவர்களின் Accident, சுகாதாரம் போன்றவைகளுக்கு கொடுப்பனவு கிடைக்கின்றது. ஆனால் எமது நிரந்தரமற்ற ஊழியர்களுக்கு எந்தவிதமான Insurance உம் இல்லை. அவர்கள் வேலை செய்யும் நேரம் ஏதாவது விபத்துகள் நடந்தால் சபையினால் அந்த செலவுகள் செய்யப்பட வேண்டும். ஆனால் சுகயீனமுற்றால் அதை நமக்கு எதுவும் செய்ய முடியாத நிலை அதற்காக எந்த ஊழியர்களுக்கு அவர்கள் நமது சபையின் சேவையாளர்களாக இருக்கும் காலங்களில் சுகாதாரப் பக்கத்திலும், ஊழியர்களுக்கு விபத்துக்கள் நடந்தால், அவர்கள் மரணித்தால் அப்படியான Insurance Scheme அது ஒரு ஊழியருக்கு ஒரு வருடத்திற்கு ரூபா 2500/- வரும். அதை 12 ஆல் பிரித்தால் 250 அப்படி வரும். அவ்வாறு செய்வோமானால் எமது ஊழியர்களுக்கு ஒரு முன்மாதிரியாக இருப்போம்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, இதில் போடப்பட்டுள்ள தொகை 1506.17 சதம் ஆகும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அது தந்திருக்கிறது Workmens Compensation மட்டும்தான். இதைப் பார்த்துவிட்டு நான் நேற்று அவர்களிடம் இதை மாற்றி சுகாதாரத்தையும் சேர்க்க வேண்டும் என்று கூறினேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, காப்புறுதி General காப்புறுதி நிறுவனத்தில் செய்வதா? அல்லது Life Insurance இல் செய்வதா?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

இது General காப்புறுதி.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, காப்புறுதிக் காலம் எவ்வளவு?

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஒவ்வொரு வருடமும் புதுப்பிக்கப்படும்.

**தீர்மானம் - 04/28/04**

எமது சபையில் தற்காலிகமாக கடமையாற்றும் ஊழியர்களுக்கு அவர்களினது சேவைக் காலத்துக்குள் விபத்துக் காப்புறுதித் திட்டம் (WCI) பெற்றுக் கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

ஒவ்வொரு வருடமும் வருட இறுதியில் பாவனை இல்லாத பொருட்களை Board of Survey நடாத்தி அதன் பின்னர் அதில் கழிக்கப்படுகின்றவைகளை பட்டியலிட்டு திருத்தக்கூடியவைகளை திருத்துவதற்கும் மற்றவைகளை ஏல விற்பனை செய்வதற்கும் சபையின் தீர்மானம். இதில் கௌரவ

உறுப்பினர்களுக்கு விருப்பம் இருந்தால் சென்று செயலாளருடன் கதைத்து அப் பொருட்களை பார்க்கலாம். சில நேரம் எமது உத்தியோகத்தர்கள் திருத்த முடியாதவற்றை நாம் திருத்தக் கூடியதாக இருக்கும். இல்லாவிட்டால் பயன்படுத்தக்கூடியதாக இருக்கும். கௌரவ உறுப்பினர்கள் இக் கிழமைக்குள் அதனைப் பார்த்து நீங்கள் உங்களது அபிப்பிராயங்களை தெரிவித்தால் நாம் அதை திருத்தக் கூடியவைகளை எடுத்துவிட்டு ஏனையவைகளை ஏலத்தில் விடலாம்.

**தீர்மானம் - 04/28/05**

பொருட் கணிப்பீடு அறிக்கை 2019 இற்கமைய பயன்படுத்த முடியாத பொருட்கள் ஆவணங்களில் திருத்தக்கூடியவற்றை திருத்துவதற்கும், விற்பனை செய்யக்கூடியவற்றை விற்பனை செய்வதற்கும், அழிக்கக்கூடியதை அழிப்பதற்குமான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

எலும்பு அரைக்கும் ஆலை. இச் சரித்திரம் எனக்கும் கௌரவ உபதவிசாளருக்கு மட்டும்தான் தெரியும். சென்ற சபைக் காலத்தில் எமது ஊரைச் சேர்ந்த ஒருவர் ஒலுவிலில் நடத்திக் கொண்டிருந்த எலும்பு அரைக்கும் ஆலையைக் கொண்டு வந்து எமது Magistrate Court உருவாகுவதற்கு முதல் அதற்கு பின்னால் அவர் எமது Slaughter House இல் இருந்து எலும்புகளை எடுத்து அரைத்துக்கு இருந்த காலம். ஆனால் அதை அவருக்கு வெற்றிகரமாக செய்ய இயலாமல் போய்விட்டது. அதற்கு பிறகு அவர் வாடகை கட்டாமல் விட்டுவிட்டார். அதனால் அவர் அந்த Project ஐ கைவிட்டுவிட்டார். தற்போது சட்டத்தின்படி அவ் அறவீடுகளை அவரிடம் இருந்து எடுப்பது என்றால் இது கிட்டத்தட்ட 5 வருடமாக இருந்து துருப்பிடித்து விட்டது. அதை திருத்துவது என்றால் திருத்தி பாவித்து இல்லாவிட்டால் ஏலத்தில் விட்டு அதில் வரும் வருமானத்தில் இருந்து அவர் கட்டவேண்டிய தொகைகளை சபைக்கு செலுத்தி நாம் ஏலத்தில் விட்டு சபைக்கு வரவேண்டியதை எடுத்துவிட்டு மீதியை நாம் அவருக்கு கொடுக்கலாமா? ஏனென்றால் அவரின் மனோநிலை நல்லமில்லை. அவர் ஒரு சுகயீனமுற்றவராக தற்போது இருக்கின்றார். இதனால் நாம் எடுக்க வேண்டியதை எடுத்துவிட்டு எஞ்சிய பணத்தை அவருக்கு கொடுக்கலாம்.

**தீர்மானம் - 04/28/06**

எலும்பு அரைக்கும் ஆலையிலுள்ள எலும்பு அரைக்கும் இயந்திரத்தினைத் திருத்த முடியுமானால் திருத்தி, சேதனப் பயளை தயாரிக்கும் நிலையத்தில் பயன்படுத்துவதற்கும், அங்குள்ள பயன்படுத்த முடியாத பொருட்களை ஏலம் மூலம் விற்பனை செய்து சபைக்கு செலுத்த வேண்டிய நிலுவையினை செலுத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

எமது ஊரைச் சேர்ந்த இளைஞனினால் தயாரிக்கப்பட்ட தன்னியக்க கைகழுவும் இயந்திரத்தினை முன்னுதாரணமாக செய்திருப்பதனால் ஊக்குவிக்கும் முகமாக அதனை கொள்வனவு செய்து பொருத்தமான இடங்களுக்கு பொருத்தலாம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அவ் இயந்திரம் உண்மையிலே வரவேற்கத்தக்க விடயம். குறிப்பாக எமது சபைக்கு சொந்தமான 10 வட்டாரங்கள் இருக்கின்றது. 10 வட்டாரங்களிலும் கௌரவ உறுப்பினர்கள் இருக்கின்றார்கள். ஒரு வட்டாரத்திற்கு ஒன்று என்ற அடிப்படையிலாவது ஒவ்வொரு வட்டாரத்திலும் ஒரு பொதுவான இடங்களை சிந்தித்து இதனை எடுப்பதற்கு முயற்சி செய்ய வேண்டும். அதே நேரம் ஒரு வட்டாரத்திலே 03 உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் அதற்காக 03 என்று இல்லாமல் ஒரு வட்டாரத்திற்கு ஒன்று என்ற அடிப்படையில் எடுக்கலாம்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
நீங்கள் இதில் தெளிவாக இருக்க வேண்டும். முடிவுகள் எடுக்கின்ற போது உணர்ச்சிக்கு பின்னால் முடிவெடுக்கக் கூடாது. நமது தேவை என்ன? இந்த நாடே கூறுவது, புது வழி. முதல் நாம் கைகழுவுவதில்லை. ஆனால் தற்போது ஒரு கட்டடத்திற்குள் செல்வது என்றாலும் கைகழுவ வேண்டும். அதற்கு வழிகாட்டியாக சபை இருக்க வேண்டும். எங்கங்கு அதைச் செய்யலாமோ, எங்கங்கு நிறுவனத்திற்கு செய்ய இயலாதோ, அது அவ்விடத்திற்கு செல்ல வேண்டும். எல்லா சனசமூக நிலயங்களுக்கும், எல்லா நூலகங்களுக்கும் இருக்க வேண்டும். GS அலுவலகத்திற்கு பிரதேச செயலகத்தினால் அப்படி இல்லாவிட்டால் நாம் செய்யலாமா? கிளினிக் சென்டர்களுக்கு செய்ய வேண்டும். நாம் எவ்வளவும் செய்யலாம் ஆனால் மொத்தமாக எடுக்கும் போது விலை நிர்ணயம் இருக்க வேண்டும். நாம் பொதுவாக பொருத்தமான இடங்களுக்கு பொருத்துவதற்கு ஒரு தீர்மானத்தை எடுப்போம். கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்களின் தலைமையில் எல்லா கௌரவ உறுப்பினர்களும் செயலாளருடன் கலந்தாலோசித்து எங்கங்கு பொருத்தலாம் என்ற ஒரு பட்டியலை தயாரித்து இக் கிழமைக்குள் செயலாளரிடம் கொடுக்க வேண்டும்.

**தீர்மானம் - 04/28/07**
சம்மாந்துறையின் பிரபல சமூக சேவையாளர் மௌலவி முஸ்தபா அவர்களின் மகனால் தயாரிக்கப்பட்ட தன்னியக்க கைகழுவும் இயந்திரம் தேவையான அளவு கொள்வனவு செய்து பொருத்தமான இடங்களுக்கு பொருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
"சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும்" உங்களுக்கு தெரியும். இச் சபை கருத்து முறண்பாடு இருந்தாலும் நாம் சம்மாந்துறையின் வரலாறும் வாழ்வியலும் என்பதில் ஏதோ ஒரு வகையில் ஆவணப்படுத்தப்பட்டு இருக்கின்றது. அதை ஊருக்குள் மக்கள் வாசிப்பதனால் அதன் விமர்சனங்கள் வந்து அதில் திருத்தம் வருவதற்கு அடித்தளமாக இருக்கும் என்ற அடிப்படையில் நாம் ஒரு முடிவு எடுத்து 50 புத்தகங்கள் எடுத்து பாடசாலைகளுக்கு ஒவ்வொரு பிரதி கொடுத்துள்ளோம். இதற்கு மேலதிகமாக சென்ற கிழமை இப் புத்தகத்தை தயாரித்த குழு என்னை அழைத்து உங்களின் தவிசாளர் என்ற ரீதியில் என்னை அழைத்து ஒரு இராப்போசணமும் தந்து ஒரு Plague உம் தந்து தவிசாளர் என்ற ரீதியில் தருகின்ற சகல பொருட்களும் எனது Office க்குள் இருக்கின்றது. அதனை நான் வீட்டுக்கு எடுத்து செல்வதில்லை.

அதில் பல கருத்துக்கள் ஒவ்வொரு ஆய்வாளர்களும் அதன் குறைபாடுகளை பேசினார்கள். இறுதியில் என்னையும் என்னுடைய கருத்தை சொல்ல சொன்னார்கள். அதில் உங்கள் சார்பில் நான் கூறியது என்னவென்றால் இது ஒரு ஆதார பூர்வமான சரித்திரப் புத்தகம் அல்ல. இது கே.எம்.டி.சில்வா எழுதியது போலோ, லோனா ரெட்டிய ராஜா எழுதிய போலோ, பரணவிதான எழுதியது போலோ சரித்திரப் புத்தகம் அல்ல. இவ் ஊர் எப்படி வளர்ந்தது என்று ஒரு வகையான சரித்திம் பலரின் கூட்டு முயற்சியினால் இது ஒரு கூட்டு முயற்சி. எதிர்வரும் காலங்களில் அவ் ஆர்வம் இருப்பவர்கள் திருத்தங்களை உருவாக்கி மீண்டும் ஒரு ஆக்கபூர்வமான ஒரு சரித்திரத்தை

சரியாக விளங்கக் கூடிய புத்தகமாக மாற்ற வேண்டும் என்பது எங்கள் சபையின் கருத்து அதனால் அதனை ஊக்குவிப்பதற்காகத்தான் நாங்கள் 50 பிரதிகளை எடுத்தோம். அப்படி பிரதி எடுத்தது நாம் மட்டும்தான். மீண்டும் அவர்கள் இதை மாவட்ட ரீதியில், மாகாண ரீதியில் அதை பரப்புவதற்கு சபை உதவ வேண்டும் என்ற வேண்டுகோள் விடுத்திருந்தார்கள். அந்த வேண்டுகோளை நான் செயலாளரிடம் கொடுத்து அப்படியானால் எவ்வளவு பிரதிகள் தேவைப்படும் என்று கணிப்பு செய்த போது இன்னும் 38 பிரதிகள் தேவைப்படும். இதைப் பற்றி உங்களின் கருத்துக்களை அறிய விரும்புகின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது சம்மாந்துறையின் சரித்திரம். தற்போது நாங்கள் 50 பிரதிகளை கொள்வனவு செய்து உள்ளூர்களிலே பரிமாறிக் கொண்டோம். மேற்கொண்ட தீர்மானத்தில் 500 பிரதிகளானாலும் கொடுக்கலாம். தீவின் எப்பாகத்திற்கு அனுப்ப வேண்டுமானாலும் இவ் ஊரின் சரித்திரம் அதனை கட்டாயம் நாம் கொள்வனவு செய்யலாம். ஆனால் இப் புத்தகத்தில் சிறு பகுதிகளை பார்த்திருக்கின்றேன். முழுமையாக நமது சபை அங்கத்தவர்கள் கட்டாயம் பார்க்க வேண்டிய ஒரு புத்தகம். அது இன்னும் முற்றுப்பெறவில்லை. ஏனைய ஊர்களுக்கு இதனை வழங்குவது என்றால் ஒரு சரித்திரம் வேண்டும். வீரமுனைக்கு என்று ஒரு சரித்திரம் எழுதப்பட்டிருக்கின்றது. வீரமுனைக் கோயில் இராசதானி பிரயாணிக்கின்ற காலத்தில் கப்பலில் வந்து முட்டிய சிலையைக் கொண்டு வைப்பதற்காக வந்து அவ் இடத்தில் கோயிலை நிறுவி அதற்கு ஏற்ற மாதிரி அந்த நேரம் இருந்தவர்கள் அதற்குரிய உதவிகளை செய்து ஒரு பாரம்பரிய செப்பு ஏடு நூல் ஒன்று வரையப்பட்டுள்ளது. கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி அவர்களுக்கு தெரியும். ஆனால் நமது பிரதேசத்தில் மல்காம்பிட்டியில் அங்கே இருந்த சிக்கந்தர் அதற்கு முதல் இருந்த மல்கன் என்றவர்களை அந்தக் காலத்தில் இருந்த அரசர்கள் வரவேற்று இந்த இடம் உங்களுக்குச் சொந்தமானது என்று கூறி அந்த அரசாட்சியை கொடுத்த சரித்திரம் இருக்கின்றது. எப்படி இப் பூமிகள் பள்ளிவாசல்களுக்கு சென்றடைந்தது என்பதற்கு சரியான வரைவிலக்கணம் இருக்க வேண்டும். அதுமட்டுமல்லாமல் 142 தொழிலாளர்களை வைத்துக் கொண்டிருந்த MPCS வெறுமனே 4 தொழிலாளர்களை வைத்துக் கொள்ள முடியாத ஒரு நிலையமாக இருக்கின்றது. அந் நிலையத்தை உங்களது பாட்டனாராகிய போஸ்ட் மாஸ்டர் அந்த Society ஐ பதிவு செய்ய பணத்தை எடுத்துச் சென்ற நேரம் அது களவு போன போது அவரது மனைவிக்கும் தெரியாமல் அவரது காணியை விற்று பதிந்த நிலம்தான் அது. அந்த சரித்திரங்கள் இறுதியில் அவரும் நஞ்சூட்டப்பட்டு மரணித்தார் என்ற சரித்திரங்கள் இருக்கின்றது.

ஊருக்காக சேவை செய்ய வேண்டி வந்தவர்கள் நிறையப் பேர் அவர்களது 50 வயதிற்குள்ளேயே அரவணைத்த காலம். உதாரணத்திற்கு சொல்லப் போனால் அமீர் அலி தவிசாளர் அவர்களின் காலத்தை எடுத்துக் கொண்டால் ஹிஜ்ரா சந்தியில் நான் சிறுவனாக இருக்கின்ற காலம் எதிர்காலத்தில் ஒரு அமைச்சரவை அந்தஸ்த்து உள்ளவர் என்று கூறி 03 வாரத்துக்குள் மாரடைப்பு வந்து மரணித்த சம்பவம் இருக்கின்றது. உங்களது தந்தை இன்று இறந்தநாள் என்று கூறினீர்கள். அவரின் மரணத்தில்கூட அந்த காலத்தில் நான் சிறுவனாக இருக்கின்ற போது அங்கமுற்றுதான் காலமானார் அந்த சரித்திரம் இருக்கின்றது. இன்னும் சிலர் ஹிஜ்ரா பள்ளிவாசலுக்கு இவ் வளவை எடுத்ததற்காக வளவு கொடுத்து இன்னும் ஒரு பகுதியை கிணறு கட்டி இப்படியான உதவி செய்தவர்கள். அவர்களின் சரித்திரம் சேர்க்கப்பட வேண்டும். எங்களது பள்ளிவாசல் எப்படி வந்தது, கோயில் எப்படி வந்தது இப்படியான சரித்திரங்கள் சம்மாந்துறையின் சரித்திரமே என்று சொன்னால் சம்மாந்துறை மக்களின் சரித்திரமாக இருக்க வேண்டும். அதில் இன பேதமாக இருக்க முடியாது. எங்கள் வரலாறு ஏனையவர்களின் வரலாறு. ஒரு பூரண புத்தகமாக ஏனையோர்களுக்கு வழங்க வேண்டும். ஏனென்றால் இதை பார்த்து விட்டு இதுதான் சம்மாந்துறையின் சரித்திரம் என்று நினைக்க கூடாது. இது சம்மாந்துறையின் ஒரு அங்கம் முழுமையான சம்மாந்துறையின் சரித்திரம் அல்ல. எனவே இதை நாங்கள் ஏதோ ஒரு நாளில் எல்லோரும் கலந்து ஆலோசித்து இதுக்கென்று ஒருநாள் ஒதுக்கி நாங்கள் இதில் நல்ல ஒரு தீர்வைக் கண்டு சில தரவுகளையும் சேர்த்து அனுப்ப வேண்டும் என்று கேட்டுக் கொள்வதோடு,

நீங்கள் கூறினீர்கள் விவசாயத்துறை தொடர்பாக இந்த விவசாயத்துறையை மேம்படுத்த உதவும் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிகழ்ச்சித் திட்டம் குழுத் தலைவர் அவர் ஒரு கலாநிதி கிறிஸ்டோட்டல் பப்ளஸ் ஒருவர் நமது ஊரின் சரித்திரத்தையும் இங்கே ஒரு Research Center இருக்கு என்பதையும், இப் பிரதேசத்தின் புகைப்படங்களையும் அனுப்பி எதுவென்றாலும் குறிப்பிட்ட பிரதேசமான கொழும்பை அண்டிய பிரதேசத்தில் பயிற்சி வகுப்புகளை நடாத்துவதில் பிரயோசனம் இல்லை. அதிகமாக இந்த கிழக்கு மாகாணதிலோ, இலங்கைக்கோ அரிசி கொடுக்கின்ற தரிசி நிலங்களும் விவசாய நிலங்களையும் உள்ளடக்கியதுதான் எமது பிரதேசம். இங்குதான் நாம் இலங்யிலே சமமான காணிகளையும் அதிக விளைச்சல் ஏற்படக்கூடிய காணிகளையும் காணலாம். இந்த விபரங்களை அவர்களுக்கு கொடுத்திருக்கின்றேன். இப் பிரதேசத்திற்கு பொருத்தமான பயிர்களை உற்பத்தி செய்ய வேண்டும். உற்பத்தி செய்கின்ற பயிர்கள் இந்த மக்களுக்கு பிரயோசனமடைய வேண்டும். பிரயோசனம் அடையாமல் உற்பத்தியை பெருக்கி பிரயோசனம் இல்லை. 2 வாரங்களுக்குள் நல்ல முடிவு கிடைக்கும் என்று நினைக்கின்றேன். அதை நாம் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். நமது பிரதேசத்தில் இணங்காணப்பட்ட அரச காணிகள் அனைத்தும் இந்த பிரதேச சபையும், பிரதேசசெயலகமும் இணைந்து அதற்கு அப்பால் வேறு எவரும் பாவனைக்கு உட்படுத்த முடியாத மாதிரி நமது அருமையான கௌரவ உறுப்பினர்கள் கொண்ட சபையில் ஏகமனதாக ஒரு தீர்மானத்தை நிறைவேற்றி அதை பிரதேச செயலாளருக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு அனுப்பினால்தான் எங்களுக்கு இனிவரும் காலங்களில் சில விடயங்களை கையாள முடியும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, எமது கௌரவ உப தவிசாளர் அவர்களின் கருத்துக்களை உள்வாங்கியவளாக, நீங்கள் எடுக்கின்ற முயற்சி நல்ல முயற்சி. எமது சரித்திரம் மாகாணத்திற்கு தெரிய வேண்டும் என்பது, ஆனால் எமது 52 கிராம சேவகர் பிரிவுகளிலும் முதியோர் அமைப்புகள் இங்கு காணப்படுகின்றது. அவர்களில் அதிகமானவர்கள் படித்தவர்கள் விவசாயத்தைப் பற்றி அறிவுள்ளவர்கள். ஒவ்வொரு அமைப்புகளுக்கும் எமது சபையினால் அப் புத்தகத்தை கொள்வனவு செய்து வழங்கினால் நல்லது. ஏனென்றால் அங்கு அவர்களின் பேரப் பிள்ளைகளை பார்த்த காலத்தில் ஒரு நிம்மதியாக இருக்கும் போது இந்தப் புத்தகத்தை வாசிப்பார்கள். அதில் ஏதாவது சரித்திரங்கள் பிழையாக இருந்தால் அவர்கள் எங்களிடம் கூறுவதற்கு வாய்ப்பு ஏற்படும். எனவே அவர்களுக்கு கொடுக்கலாம் என்று நினைக்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசளர் அவர்களே, இப் புத்தகத்தில் ஒரு சரித்திரத்தில் கொஞ்சமாக பார்த்தேன். ஆனால் அதில் சில முக்கியமான விடயங்கள் சேர்க்கப்படவேண்டி இருக்கின்றது. உதாரணமாக நீதிமன்றம் வந்ததற்கு ஆதாரமாக இருந்தவர்தான் எங்களது அப்துள்ளாஹ் நீதவான், எமது கௌரவ உறுப்பினர் சட்டத்தரணி முஸ்தபா அவர்கள். இவர்களை எல்லாம் அப்புத்தகத்தில் சேர்க்கவில்லை. இதே போன்று வைத்தியசாலைக்கு பின்னால் உங்களுக்கு தெரியும் உங்களது சிறிய தந்தையான தௌபீக் தவிசாளர் அவர்களால் வழங்கப்பட்ட காணி. அது எனது கனவரின் ஒரு அப்பா வம்சத்திலும் சேர்க்கப்பட்டுள்ளது. அந்த சரித்திரங்கள் எல்லாம் மறைக்கப்பட்டிருக்கின்றது. எனது தந்தை காலமாகி 08 வருடம் ஆகும். இதற்கு முதல் தர்மமாக சம்மாந்துறையில் ஒரு வைத்தியத்தை செய்து வந்தார். நான் பிறக்காத காலம் இருந்து கிட்டத்தட்ட அவர் 65 வருடமாக இச் சேவையை செய்து வந்தார். இவை எல்லாம் மறைக்கப்பட்டதுடன் அவர் பெண்கள் மதரஸா என்ற இடத்திற்கு ஒரு ஏக்கர் காணியை அன்பளிப்பு செய்திருந்தார். இவ்வாறான விடயங்கள் மறைக்கப்பட்டு அந்த மதரஸாவில் இருக்கின்றவர்கள் தான் அதை சொந்தமாக வாங்கியது போல் சொந்தம் கொண்டாடிக் கொண்டிருக்கின்றார்கள். நாங்கள் ஏனென்றால் எனது தந்தையின் ஒரு வாக்கு நீங்கள் இக் காணியில் யாரும் உரிமை கொண்டாடக் கூடாது என்பதற்காக இதை வெளியில் சொல்லக்கூடாது என்பதற்காக இதை யாருக்கும் சொல்லவில்லை. இப்படியான உண்மையான சரித்திரங்கள் சேர்க்கப்பட வேண்டும்.

இதில் ஒரு சிலர் மட்டும் கூடி சம்மாந்துறையின் சரித்திரம் எழுதக் கூடாது. ஏனென்றால் நான் இளம் வயதில் தற்போது எனக்கு 50 வயதாகின்றது எனது தந்தை சில வரிகள் எழுதியதும் எனது

ஏட்டில் இருக்கின்றது. இன்றைக்கு ஏடு என்ற ஒன்று வாசிக்கக் கூடிய சக்தியை அல்லாஹ் எங்கள் தந்தை ஊடாக எனக்கும் எனது சகோதரனுக்கும் தந்திருக்கின்றார். இவ் ஏட்டை வாசிக்க இயலாமல் எத்தனையோ பேர் மறைத்து வைக்கின்றார்கள். இவ்வாறான ஏடுகள் வெளிவரும் போது எங்களது சம்மாந்துறை சரித்திரம் அவ் ஏட்டிலும் பதியப்பட்டிருக்கின்றது என்பதையும் நான் இவ் இடத்தில் கூறுகின்றேன். எனவே இவைகளை எல்லாம் உள்வாங்கி இந் நூலை மீண்டும் ஒரு திருத்தியமைப்புக்கு கொண்டு வந்து இதில் எமது சபை உறுப்பினர்களையும் உள்வாங்கி எல்லோரும் ஒரு வகையில் மறைமுகமாக தெரிந்தும், தெரியாமலும் வைத்திருப்பார்கள். சம்மாந்துறை சரித்திரத்தை எங்களது கௌரவ உப தவிசாளர் கூறும் போது எனக்கும் அதில் சில பகுதிகள் தெரியும் அதே போன்றுதான் அந்த நேரம் பிள்ளை பிறந்தவுடன் பிறந்த நேரம், காலம் வயது, கிழமை எல்லாம் குறிப்பிடப்பட்டு எவ்விடத்தில் பிறந்தவர்கள் என்று எழுதியவர்கள் அந்த நேரத்தில். அவர்கள் யாரார் என்ன செய்த என்பதையும் எழுதப்பட்டிருக்கும். இந்த சரித்திரங்கள் எங்களிடம் இருக்கலாம் தகப்பன் மரணித்து விட்டால் பிள்ளைகள் இருக்கும் கேட்டுப் பார்க்கலாம் என்பதை யாரும் தேடியதில்லை. நான் இப் புத்தகம் தயாரிக்கும் போது கேள்விப்பட்டேன் ஒரு சிலரை மட்டும்தான் அழைத்தார்கள். ஆனால் உங்களையும் அழைத்தார்களா என்பது எனக்கு தெரியாது. கௌரவ தவிசாளர் அவர்களையும் அழைத்து இதில் சில விடயங்களை சேர்க்க வேண்டும்.

மஹல்லா மஹல்லா மையவாடியின் காணியை எடுப்பதற்காக எங்களது மஜீட் MP இன் சரித்திரம் ஒன்று இருக்கின்றது. அதை நான் எனது தகப்பனின் நூலில் இருந்து பார்த்தேன். அதை எடுப்பதற்கு எவ்வளவோ எதிர்ப்புகள் வந்தும் அவர் அதை தனித்து நின்று அதற்கான காணிகளை 10 வீட்டுத்திட்டம், 20 வீட்டுத்திட்ட சுலையஞ் சேனை, சமீட்புர 20 வீட்டுத்திட்டம், வங்களாவடியில் 05 வீட்டுத்திட்டம் இவ்வாறான திட்டங்களை எல்லாம் கொண்டு வந்து அந்த இடத்திற்கு ஏற்ற காணிகளை ஒதுக்கிவிட்டுத்தான் அந்த நிலத்தை எடுத்தார். அதில் மீண்டும் காணியைப் பெற்றுக் கொண்டவர்கள் எனக்கு இவ் இடம் வேண்டும் நிலம் வேண்டும் என்று கூறி அதில் ஒரு பகுதியை பிடித்துக் கொண்டிருக்கின்றார்கள். அதை வைத்துக் கொண்டு அஸ்ஸமா பாடசாலையின் பின்னால் என்னால் வளவு தரவில்லை மையவாடி காணியை எடுத்தோம் என்று அந்த நிலை ஒரு வீட்டில் 05 பிள்ளை என்றால் 05 பிள்ளைக்கும் மஜீட் MP இனால் வீடு வழங்கப்பட்டுள்ளது. நிலம் வழங்கப்பட்டுள்ளது. இவைகள் சரித்திரத்தில் சேர்க்கப்பட வேண்டும். மறைந்து போகக் கூடாது. இவைகளை சேர்த்து நாம் புத்தகங்களை பிரசுரித்தால் நல்லது என்பது எனது கருத்து என்பதை கூறி விடைபெறுகின்றேன்.

### கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும் என்ற புத்தகம் ஆக்கப்படுவதற்கு மூல கருத்தாவாக இருந்த முன்னால் அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான M.I.M.அன்வர் இஸ்மாயில் அவர்களுடன் கலந்துரையாடல் செய்து கொண்டிருக்கின்ற போது அவர் இவ் ஊரின் அபிவிருத்திகள் சம்மந்தமாகவும், இவ் ஊரின் வரலாறு சம்மந்தமாகவும் எழுதப்பட வேண்டும் என்று தற்போது இருக்கின்ற A.C. இஸ்மாயில், பேராசிரியர் ரமீஸ் அப்துள்ளாஹ் ஆகியோருடன் கலந்துரையாடல் செய்யும் போது அதை கேட்டுக் கொண்டிருக்கும் சந்தர்ப்பம் கிடைத்தது. அதன் அடிப்படையில்தான் இப்புத்தகம் அன்று எழுதுவதற்கு ஆயத்தமாக்கப்பட்டது. அதன் பொறுப்பை அன்வர் இஸ்மாயில் அவர்களின் பிரத்தியோக செயலாளர் Y.B. சலீம் அவர்களிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவரின் மரணத்தின் பின் இது முற்றுப்பெறாத நிலையில் எழுதி முடிக்கப்பட்டிருந்தது.

இதில் நிறைய குறைபாடுகள் இருப்பதாக கௌரவ உறுப்பினர்களாலும் இதனை வாசித்து இதனை அறிந்த ஏனைய பொது மக்களும் கருத்துக்கள் கூறியிருக்கின்றார்கள். எனவே இங்கு கூறப்பட்ட கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கி இவைகள் அனைத்தும் பிழைகள் என்று இல்லாமல் இன்னும் திருத்தப்பட வேண்டிய, சேர்க்கப்பட வேண்டிய விடயங்களை இந்த மண்ணிற்கு நீங்கள் கௌரவ தவிசாளராக ஒரு சிறந்த தலைமைத்துவம் வழங்கிக் கொண்டிருக்கும் நீங்கள் உங்கள் தலைமையிலாவது செய்து பூரணப்படுத்தப்பட வேண்டும் என்பது எனது ஒரு

ஆசை. இதற்கு வேண்டிய தேவையான ஆவணங்கள், இது சம்மந்தப்பட்ட சில பொக்கிசங்கள் உங்களிடம் வழங்கப்பட்டிருக்கின்றது. இந்த ஊரும் சபையும் அறியும். ஆகவே இந்த மகத்தான பணியை செய்து முடிக்குமாறு சபையோர் சார்பாக உங்களிடம் ஒரு வேண்டுகோளை விடுக்கின்றேன்.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் றியாஸின் பாட்டனார் அவரும் உலகத்திலே முதலாவது தமிழ் பேராசிரியரான விபுலானந்தரும் ஒன்றாக இருந்ததும் விபுலானந்தரை அவருடைய சொந்தப்பெயர் மயில்வாகனம் என்று அழைத்த விடயத்தை நான் எனது ஆசான் ஒருவரிடம் கூறும்போது அவர் துடித்தார். அர்கள் இரண்டு பேர் சம்மந்தமாக ஏதாவது ஒரு சின்ன விடயத்தையாவது தாருங்கள். எதிர்காலத்தில் அவுஸ்திரேலியாவில் இருந்து வேண்டும் என்றாலும் அதற்கான ஒற்றுமையை கொண்டு வரலாம் என்று சொல்லி, அந்தளவுக்கு சரித்திரம் என்பது மிக முக்கியம் என்பதை இச்சந்தர்ப்பத்தில் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இவ் இடத்தில் நான் ஒரு பதிவையும் செய்ய வேண்டி இருக்கின்றது. எனது தகப்பனின் தகப்பன் கண்ணாடி மரைக்கார் என்று அழைக்கப்படுகின்ற அது முஹம்மது மரைக்கார் இஸ்மாயில் என்பவரும் விபுலானந்த அடிகளும் ஒரே வகுப்பில் கல்வி கற்ற மாணவர்கள். அந்த நட்பின் காரணமாக மயில்வாகனம் என்று அழைக்கப்படுகின்ற விபுலானந்த அடிகள் என்னுடைய தகப்பனாரின் தகப்பனின் மூத்தப்பாவின் வீட்டுக்கு வருவதாகவும் அவர் அங்கு வந்து இருந்து உறவாடி பல விடயங்களை அவர் பேசி போவதாகவும் எனது தந்தையின் சகோதரர் M.I.M.இப்றாஹிம் எங்களிடம் கூறியிருக்கின்றார். எந்தவிதமான எங்களுக்கு ஆதார பூர்வமாக ஆவணப்படுத்தப்படவில்லை. இது எங்களது பெரியப்பா கூறிய விடயம் எனவே இது வரலாறுகள். இவ் உறவுகள் எமது தமிழ் உறவுகளுடன் பிண்ணிப் பிணைந்தவை. எனது மூத்தப்பா English Medium த்தில் படித்த ஒருவர். ஒரு பாண்டித்தியம் பெற்ற மனிதராக வாழ்ந்து வந்தார். இது சரித்திரங்கள் சம்பவங்கள் இப்படியான குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு ஆவண செய்யுமாறும் கௌரவ தவிசாளர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசளர் அவர்களே, தொய்யம்பட்டை சந்தியில் இருக்கும் வாப்பட மடு என்று கூறப்படும் இடம் அது உண்மையிலே அப்படி ஒரு பட்டம் இல்லை. அது வாகுப்போடியாரின் இடம் எனது தாயின் தந்தையின் இடம்தான் அது. அந்த இடம் தற்போது பெயர்கள் புணையப்பட்டு வாப்பட மடு என்று அந்த மடு மூடுப்படும் போது எனக்கும் ஒரு கவலை. எனது தாய் சொன்னார் எனது தாயின் தந்தை கூறுவாராம். இம் மடுவை ஏன் விட்டு வைத்தேன் 02 ஏக்கர் அளவு ஏனென்றால் மிருகங்கள் வந்து தண்ணி குடிப்பதற்கும் வயல்களுக்கு தண்ணீர் இவ்விடத்தில் நின்றால் வறட்சியான நேரம் இதில் இருந்து மோட்டரைப் போட்டு இக் காணிகளை பாவிக்க வேண்டும் என்பதற்காக த்தான் நான் இந்த வாப்பட மடுவை விட்டு வைத்திருக்கின்றேன். இதில் யாரும் சொந்தம் கொண்டாடக் கூடாது என்றும் வாக்களித்திருக்கிறார். இந்த இடம் மூடப்படும் போது அதுவும் ஒரு வேதனையான விடயம் இதுவும் சம்மாந்துறையின் சரித்திரத்தில் பொறிக்கப்பட வேண்டும்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, என்னுடைய 36 வயதிற்கும் உங்களின் தந்தையாரை படங்களில் கூட பார்த்ததில்லை. அன்னாரினுடைய மறுமை வாழ்வு ஈடேற ஜென்னதுல் பிர்தௌஸ் எனும் உயர்தரமான சுவனத்தையும், கண்மனி நாயகம் (ஸல்) அவர்களினுடைய கைகரங்களினால் நீர் அருந்தக் கூடிய பாக்கியத்தையும் வல்ல இறைவன் அன்னாருக்கு அருள வேண்டும் என்று பிரார்த்தித்தவனாக, சம்மாந்துறையின் வரலாறும் வாழ்வியலும் என்கின்ற புத்தகத்தை ஓரளவேனும் 2/3 பகுதியை படித்து முடித்திருக்கின்றேன். என்னுடைய வயதிற்கு எட்டியபடி இப் புத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்ற விடயம் சரித்திரம் சரியா பிழையா என்பதை தீர்மானிக்கக் கூடிய சக்தி

என்னிடம் இல்லை. ஆனால் நான் கேட்டறிந்த வகையில் கௌரவ முன்னாள் தவிசாளர் அமீர் அலி தவிசாளர் அவர்களுடைய பூரணமான வரலாறு அப் புத்தகத்திலே இணைக்கப்படவில்லை என்பது எனது தந்தையாரின் தந்தையின் தம்பி ஒரு முதியவர் கூறியிருந்தார். ஏனென்றால் அவரோடு மிக நெருக்கமான உறவை வைத்துக் கொண்டிருந்தவர் காட்டு உதுமார் என்று சொல்லக்கூடியவர் எனக்கு சொன்னார். அதே போல் கௌரவ தவிசாளர் அவர்களே, அப் புத்தகத்தை நான் வாசித்த போது ஊரினுடைய ஓரிரு குடும்பங்களின் வரலாறு அப்புத்தகத்திலே மிகக் கூடுதலாக இணைக்கப்பட்டுள்ளது. அதே போல் அரசியல் வழிபாடுகளும் இப் புத்தகத்திலே இணைக்கப்பட்டுள்ளது.

கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் கூறியவாறு மர்ஹூம் அமைச்சர் அன்வர் இஸ்மாயில் அவர்களினுடைய ஒரு கனவுதான் சம்மாந்துறை வரலாறு எனும் புத்தகத்தை எழுத வேண்டும் என்பது. ஆனால் அவர் சிந்தித்த நோக்கம் வேறு இப் புத்தகம் எழுதப்பட்டது வேறு ஏனென்றால் நான் வயதில் சிறியவனாக இருந்தாலும் கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்கள் கூறியது போன்று இந்த புத்தகத்தை எழுத வேண்டும் என்ற ஆரம்ப கூட்டத்தில் நானும் இருந்தேன். அந்த நேரம் அக் குழுவிற்கு தலைவராக எமது புஹாரி மௌலவி அவர்களை நியமிப்பதாக முடிவு செய்தார்கள். அச் சந்தர்ப்பத்தில் நம்பிக்கையாளர் சபையினுடைய தலைவராக இருந்தார் என்று நினைக்கின்றேன். ஆனால் நான் அப் புத்தகத்தை வாசித்திருந்தேன். வரலாறுகள் கூறப்படுகின்ற போது இந்த மண்ணினுடைய பிதா மகன் நீங்கள். இரண்டாவது தடவையாகவும் இச் சபையினுடைய தவிசாளராக வந்திருக்கின்றீர்கள். இச் சரித்திரத்தில் அது இடம்பெற வேண்டும். அது இடம்பெறவில்லை. அதனைத் தொடர்ந்து அதி மேதகு ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்த்தன அவர்களது ஆட்சிக்காலத்தின் பின் அவர்களால் எழுதப்பட்ட யாப்பு மாற்றப்பட்டதன் பின் வட்டார ரீதியிலான தேர்தல் கடந்த 2018 ஆம் ஆண்டுதான் இடம்பெற்றது. அந்த தேர்தலிலே இடம்பெற்ற ஒரு அம்சம் என்னவென்றால் 25% பெண் உறுப்பினர்களை அதிலே உள்வாங்க வேண்டும் என்று, அவ்வாறாக பார்க்கின்ற போது இங்கே இருக்கின்ற 05 பெண்மனிகள் இவ் ஊரினுடைய சரித்திரம். அதே போன்று கௌரவ உறுப்பினர்களும் சரித்திரம். இதை அப் புத்தகத்திலே உள்ளடக்கப்பட வேண்டிய விடயம்.

அதே போன்று இலங்கைச் சம்பியன் என்று அழைக்கக் கூடியவர் ஒரு தூதுவர் ஆலையத்திலே வேலை செய்தவர். அதற்கு பிற்பாடு சம்மாந்துறை மண்ணிலே தொடர்ச்சியாக 23 வருடங்கள் ஒரு வெளிநாட்டு தூதுவர் ஆலையத்திலே வேலை செய்தவராக இருந்தார் கௌரவ உறுப்பினர் மாஹிர் அவர்கள். இந்த சம்மாந்துறை மண்ணிலே பிறந்தவர். அவரோடு ஏறத்தாள 20 வருடம் பிண்ணிப் பிணைந்து இருந்தவன் என்ற ரீதியிலே ஒரு சிலவற்றை கூற வேண்டும். அவர் வலது கையால் கொடுப்பது இடது கைக்கு தெரியமாட்டாது. அவ்வாறு ஒரு நற்கருமங்களை செய்யக்கூடியவர் அவருடைய உதவியினால் இன்று வெளியாகிய பலவேறுபட்ட பொருளியலாளர்கள், வைத்தியர்கள் பல்வேறுபட்ட துறைகளிலே இருக்கின்றார்கள். அவ்வாறான ஒரு நல்லெண்ணம் கொண்ட நன் நோக்கம் கொண்ட ஒரே தூதுவர் ஆலையத்தில் 23 வருடங்கள் தொடர்ச்சியாக கடமையாற்றிய ஒருவரின் சரித்திரம் இதிலே ஏற்றப்பட வேண்டும். அதே போன்றுதான் இந்த நீதிமன்றக் கட்டடம் நீதி மன்றக் கட்டடம். சம்மாந்துறைக்கு வருவதற்காக இந் நாட்டிலே நான் நினைக்கின்றேன் நாட்டின் அரசியல் வரலாற்றிலே முதன் முதலாக ஒரு முஸ்லிம் நீதியமைச்சராக இருந்தவர் என்றால் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸினுடைய தலைவர் அல் ஹாஜ் ரவுப் ஹக்கீம் அவர்கள்தான். அவருடைய பின்பற்றுதலின் ஊடாக இச் சம்மாந்துறை மண்ணை பிரதிநிதித்துவப் படுத்தி கௌரவ உறுப்பினர் சிரேஸ்ட சட்டத்தரணி முஸ்தபா அவர்களினுடைய வழிகாட்டலில் தான் அந்த கட்டிடம் இந்த ஊருக்கு வந்தது. இவைகள் எல்லாம் நாங்கள் குறைகளாக காணவில்லை. இப் புத்தகத்தினுடைய பாகம் 2 அல்லது பாகம் 3 என்று வரக்கூடிய புத்தகங்களில் இவை இணைக்கப்பட வேண்டும் என்பது கௌரவ உறுப்பினர்கள் அனைவரிடமும் தாழ்மையாக கேட்டுக் கொள்கின்றேன்.

ஏனென்றால் இந்த சரித்திரத்தை தற்போது எங்களுடைய தந்தையர்களினுடைய காலங்களில் இடம்பெற்றவைத்தான் நாம் பார்த்துக் கொண்டிருக்கின்றோம். சரித்திரம் சரியா பிழையா என்பதை நாம் ஊகிப்பதற்கு ஒருவருடைய உதவியை நாட வேண்டி இருக்கின்றது. ஆகவே இவைகள்

சரித்திரத்தில் இடம்பெற வேண்டும். குறிப்பாக கௌரவ பெண் உறுப்பினர்களுடைய சரித்திரம் இப் புத்தகத்தில் ஏற வேண்டும். ஏனென்றால் இன்று இருக்கின்ற நாட்டின் ஆட்சி மாற்றங்கள் ஏற்படுமாயின் பெரும்பான்மை அரசியல் யாப்பு மாற்றப்படுமாக இருந்தால் இவ்வாறான வட்டார ரீதியான தேர்தலிலே பெண் உறுப்பினர்கள் 25% என்று சொன்னால் சபைகளுக்கு வருவதற்கான சந்தர்ப்பங்கள் மிகக் குறைவாக உள்ளது. எனவே இவ்வாறான சில விடயங்களை இம் மண்ணை நேசிக்கின்ற ஒரு தலைவர் இம் மண்ணினுடைய மிகப் பெரும் அரசியல் ஆளுமை என்ற வகையில் உங்களிடம் இந்த கௌரவ சபை இப் பொறுப்புக்களை ஒப்படைக்கின்றோம் என்று கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையின் வரலாறு என்ற புத்தகத்தில் சம்மாந்துறையில் மஸ்தார் வாப்பாட பள்ளிவாசல் என்று கேள்விப்பட்டிருப்பீர்கள். அப் பள்ளிவாசலை தற்போது நிர்வாகம் செய்து கொண்டிருப்பவர்கள் அரசாங்கம். மஸ்தார் வாப்பா என்று சொல்லுபவர் எனது தந்தையின் பெரிய தந்தை. அவர் சம்மாந்துறைக்கு மட்டுமில்லாமல் மக்களுக்காக அல்லாஹ்வின் உதவியைக் கொண்டு செய்தார். அது அவரின் சொந்த நிலம் மனார்பள்ளி என்று இன்றைக்கு அழைக்கப்படுகின்ற அந்த நிலம் மஸ்தார் வாப்பாட சொந்த நிலம். அவரின் தாயின் சொத்து அச் சொத்து இன்றைக்கு அரசாங்கம் நிர்வாகம் செய்து என்று சொன்னால் அரசாங்கம் நிர்வாகம் செய்வதற்கு கொடுத்தது மஸ்தார் வாப்பா. தற்போது அவரின் வாரிசுகள் தடை செய்ய இயலாது. அதை அரசாங்கத்திற்கு கொடுக்கட்டும் அதில் மாணவர்கள் உருவாக்கப்பட வேண்டும். அந்த மாணவர்கள் மூலம் சம்மாந்துறைக்கு நிறைய அறிஞர்களும் கல்வி மான்களும் உருவாக வேண்டும் என்பதுதான் அவரின் ஆசையும் அவரின் வாரிசுகளின் ஆசையும். இது சம்மாந்துறையின் வரலாறும் வாழ்வியலும் எனும் புத்தகத்தில் பொறிக்கப்படவில்லை. அது யாரால் மஸ்தர் வாப்பா எப்படி இருந்தார் எப்படி மனார் பள்ளி நிர்வாகம் மஸ்தார் வாப்பாட சொத்தை எடுத்தது போன்ற வரலாறுகள் அப் புத்தகத்தில் குறிக்கப்படவில்லை.

சம்மாந்துறையில் எமது கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களின் வட்டாரத்தில் இருக்கின்ற றகுமானியா மஹல்லா. அதாவது வெட்டுக்காடு இந்தக் காணி எனது தாயின் தாயும் தந்தையும் சேர்ந்து வெட்டப்பட்ட காணி. அதில் இன்றைக்கு என்னுடைய மூத்த மாமாவின் மகன் முஹம்மது இஸ்மாயில் என்பவரின் மகன் அக் காணியை பராமரித்து வருகிறார். முஹம்மது இஸ்மாயிலுக்கு கொடுத்த காணியில் ரகுமானியா மஹல்லா கட்டப்பட்டு அப் பிரதேச மக்கள் அப் பள்ளிவாசலில் தொழுகின்றார்கள். அப் பெயர் குறிக்கப்படவில்லை. குறிப்பாக மஹல்லா மஹல்லா மறைந்த அப்துல் மஜீட் அவர்களின் முயற்சியால் கொண்டுவரப்பட்ட மஹல்லா மஹல்லா. அங்கு குடியிருப்புக்களில் வாழ்ந்தவர்களுக்கு கௌரவ உறுப்பினர் சரிபா அவர்கள் கூறியது போல் எல்லா இடத்திலும் எல்லாம் கௌரவ மர்ஹூம் அப்துல் மஜீட் அவர்களால் வழங்கப்பட்டிருக்கின்றது. ஆனால் எனது தாய் மாமன் சாகுல் ஹமீட் என்று சொல்கின்ற தொழில் நுட்ப கல்லூரியில் சுல்தான் காக்கா என்று அழைப்பவர். அவருக்கும் அதில் பங்கு இருக்கின்றது. ஆனால் எந்த இடத்திலும் கௌரவ மறைந்த அப்துல் மஜீட் அவர்கள் அவருக்கு வளவோ எந்த பொருளோகொடுக்கவில்லை. அவர் விரும்பவில்லை. சம்மாந்துறையின் வரலாறு என்று கூறும் போது ஒரு குறிப்பிடப்பட்ட முகங்கள் மட்டுமே போட்டிருக்கின்றார்களே தவிர மறைந்த அதாவது தெரியாமலுக்கு பெயர் சொல்ல இயலாதவர்களின் பெயர்கள் குறிப்பிடப்படவில்லை. இதில் இவைகள் உள்வாங்கப்பட வேண்டும் என்பது எனது கருத்தும் சபையோரின் கருத்துக்களாகவும் நினைத்து எனது உரையை முடித்துக் கொள்கின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, உண்மையாக இந்த சரித்திரத்தில் இணைக்கப்பட வேண்டிய மிக முக்கியமான ஒரு இடம்தான் மஹல்லா மஹல்லா மையவாடி அன்று தூர நோக்கோடு மையவாடிக்காக அந்த நிலம் ஒதுக்கப்பட்டதன் பெறுமதி இந் நாட்டிலே ஏற்பட்டிருக்கின்ற 2004 ஆம் ஆண்டு ஏற்பட்ட சுனாமி அனர்த்தத்தின் போது நாம் எல்லோரும் உணர்ந்தோம். அத்தனை ஜனாஸாக்களும் அங்கு நல்லடக்கம் செய்யப்பட்டது. அந்த சரித்திரம் ஒரு இடத்திலாவது வர வேண்டும். ஏனென்றால் இவ்வாறான ஒரு பாராளுமன்ற உறுப்பினர் இந்த மண்ணை அவருடைய

காலத்தில் பராமரித்து ஆட்சி செய்த போது மிகப் பெரும் இந்த சம்மாந்துறையினுடைய சரித்திரத்திற்காக சம்மாந்துறையினுடைய எதிர்காலத்தை முன்னோக்கி இவ்வாறான ஒரு நிலப்பரப்பை அன்று அவர் ஒதுக்கியதன் காரணமாகத்தான் ஒட்டுமொத்த அம்பாரை மாவட்ட கரையோர மாவட்டத்திலே இருந்த ஜனாசாக்கள் அத்தனையும் ஒரே நேரத்தில் நல்லடக்கம் செய்யப்பட அந்த இடம் இருந்ததால் தான் நாங்கள் எமது ஜனாசாக்களை எமது மன அனுஸ்டானத்தின் படி நல்லடக்கம் செய்யக்கூடியதாக இருந்தது. இது ஒரு முக்கியமான வரலாறு ஏறத்தாள அப்புத்தகத்தில் 2/3 பகுதியை வாசித்து முடித்துவிட்டேன். அதற்குள் இது அடங்கவில்லை. இவ்வாறான விடயங்கள் அதில் அடங்க வேண்டும் என்பது எனது கருத்து.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறையின் வரலாறும் வாழ்வியலும் எனும் புத்தகத்தை உருவாக்க ஏற்பாடு செய்த புத்தகக் குழுவிற்கு முதற்கண் இச் சபை சார்பாக நன்றியை தெரிவித்துக் கொள்கின்றேன். இன்று அப் புத்தகம் விற்பனைக்கு வந்து மக்கள் கைகளில் சென்றதன் பயனாகத்தான் நாங்கள் இன்று இச் சபைக்கு விமர்சனங்களை கொண்டு வந்துள்ளோம். உண்மையிலே அதற்காகத்தான் நான் நன்றி கூறுகின்றேன். அவர்கள் ஆரம்பித்து வைத்திருக்கின்றார்கள். இச் சபையில் கருத்துக்கள் தெரிவிக்கப்பட்டதன் பிரகாரம் அப்புத்தகம் எழுதப்பட்டதன் பிரகாரம் உண்மையிலே குறைபாடுகள் இருக்கின்றன. உண்மையாக இவ் ஊரின் எந்த ஒரு குடிமகனிடம் கேட்டாலும் சொல்லக்கூடிய வரலாற்று தடயங்களை கூட அப்புத்தகத்தில் பதியப்படாமல் இருந்தது சில வேளை அது தவறாக இருக்கலாம் மறதியாக இருக்கலாம். எனவே எமது சம்மாந்துறை என்பது ஒரு காலத்தில் காட்டுர் கல்லூரி என்று அழைக்கப்பட்டது. அந்த காலத்தில் இருந்த கல்லோயா திட்டத்தின் Chief Engineer ஆக கடமை புரிந்தவர் தான் எங்களது அல் ஹாஜ் மர்ஹூம் அப்துல் மஜீட் முன்னாள் அமைச்சர் அவர்களது மாமனார் இஸ்மாயில் Engineer என்று சொல்வார்கள். இஸ்மாயில் Engineer அவர்கள் அவரது வயோதிப காலத்தில் வீட்டில் இருக்காமல் காலையிலும் மாலையிலும் வீதியின் வலப்பக்கமாக நடந்து செல்வார். அதை ஒரு கூட்டத்தார் இஸ்மாயில் Engineer க்கு பைத்தியம் பிடித்து விட்டது என்று கூறினவர்களும் இருக்கின்றார்கள்.

அப்படிப்பட்ட அந்த கல்விமான் அவர்தான் பௌசி மாவத்தை ஊடாக சியா சந்தி ஊடாக செல்லக்கூடிய பாய்ச்சல் வாய்க்காலையும் இன்னும் பல வகையான வாய்க்கால்களையும் சம்மாந்துறையின் ஊடாக பல இடங்களுக்கு கொண்டு சென்றிருக்கிறார். அதை இந்த சம்மாந்துறை மண் மக்கள் அதிலும் முதியவர்கள் மறக்க மாட்டார்கள். அப்படியானவர்களின் சரித்திரம் இப்புத்தகத்தில் இல்லை. அதே நேரம் 1977 இல் இந் நாட்டின் ஆட்சிக்கு வந்த அரசாங்கத்தின் பொருளாதார கொள்கையின் பயனாக இந்த நாட்டில் சுபீட்சமான காலம் வந்தது. அந்த காலத்தில் தான் எமது ஊரில் கல் வீடுகளை கண்டார்கள், மின்சாரத்தை கண்டார்கள். அப்துல் மஜீட் MP அவர்களைப் பற்றி நாங்கள் நிறைய பேசலாம். ஆனால் இச் சபையில் பல கருத்துக்கள் அவரது சாதனைகளை கூறிய படியினால் பேச வேண்டிய அவசியம் இல்லை. அப்படிப்பட்ட அந்த மகான்கள் இப்புத்தகத்தில் சரியான முறையில் அவர்களை பதித்துக் காட்டவில்லை என்பது பெரும் குறைபாடாக இருக்கின்றது. அத்தோடு எங்களது மர்ஹூம் அப்துல் மஜீட் அவர்களின் மைத்துனர் முதன் முதல் முஸ்லிம் சட்ட முதுமானி ஜனாதிபதி சட்டத்தரணியாக முதலாவது ஆள் என்று நினைக்கின்றேன். அதற்கு பிற்பாடுதான் மற்றவர்கள் வந்திருக்கலாம் என்று கருதுகின்றேன். அப்படியானவர்களின் வரலாறு கூட இதில் இல்லை. எனவே இப்படியானவர்களின் வராலாறுகளை அதில் சேர்க்க வேண்டும் என்று கேட்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எம்.இன்பவதி அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும் எனும் பத்தகத்தில் மல்வத்தை தொடர்பான சரித்திரங்கள் சேர்க்கப்படவில்லை. எனவே அதில் மல்வத்தை ஊரின் சரித்திரங்கள் சேர்க்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

கௌரவ உறுப்பினர்களின் கருத்துக்களை உள்வாங்கியவனாக, இப் புத்தகம் அவர்கள் ஒவ்வொருவரும் எழுதியது. அவர்களுக்கே தெரியும் இது சம்பூரணம் இல்லை. இதனை சரியான முறையில் செய்வது என்றால் சரித்திரம் எழுதக்கூடிய நிறுவனத்தினால் செய்யலாம். கௌரவ உறுப்பினர் முஸ்தபா அவர்களின் தலைமையில் கௌரவ உப தவிசாளர் அச்சி முஹம்மட், கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி, கௌரவ உறுப்பினர் வளர்மதி, கௌரவ உறுப்பினர் றியாஸ், கௌரவ உறுப்பினர் நளீம், கௌரவ உறுப்பினர் சரீபா ஆகியோர்களின் குழு சேர்ந்து தென் கிழக்கு பல்கலைக்கழகத்துடன் சேர்ந்து ஊருக்குள் இருக்கும் குறைபாடுகளை தொகுத்து இது மீளாய்வு செய்யப்பட வேண்டும்.

**தீர்மானம் - 04/28/08**

உள்ளூரின் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக ''சம்மாந்துறை வரலாறும் வாழ்வியலும்'' எனும் புத்தகத்தை தேவையான அளவு கொள்வனவு செய்து வழங்குவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.எம்.எம்.றியாஸ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/28/09**

நிதிப்பிரிவு, வருமானப்பிரிவு மற்றும் நிர்வாகப்பிரிவு என்பவற்றுக்காக 03 மடி கனணிகள், 01 Desk Top கனணி மற்றும் 02 பிறிண்டர்கள் கொள்வனவு செய்வதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | ஏ.சி.எம்.சஹீல் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/28/10**

மல் - 14 ஆம் வீதியில் வடிகான் திருத்துவதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எஸ்.நளீம் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/28/11**

திண்மக் கழிவகற்றல் நிலையம் மற்றும் ''சௌபாக்கியா'' பயிற்செய்கை செயற்படுத்தப்படும் ஆடைத் தொழிற்சாலைக்கிடையிலான நிலத்திற்கு வேலி அமைப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உப தவிசாளர் | ஏ.அச்சி முஹம்மட் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/28/12**

வீரமுனை சவக்காலைக்கு மின் இணைப்பு பெற்றுக் கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ தவிசாளர் | ஏ.எம்.முஹம்மட் நௌசாட் |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | எம்.ரீ.பௌசுள்ளாஹ் |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**தீர்மானம் - 04/28/13**

சப்பிரிகம திட்டத்தின் கீழ் பாதை அமைப்பு ஆரம்பிக்கப்படுவதால் அதில் ஈடுபடும் தொழில்நுட்ப பயிலுனர்களுக்கு ரூபா 6000/= விசேட கொடுப்பனவு வழங்குவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ தவிசாளர் ஏ.எம்.முஹம்மட் நௌசாட்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் ஏ.எல்.எம்.ஜிப்ரி

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

**கௌரவ உறுப்பினர்களின் பிரேரணைகள்**

கௌரவ உறுப்பினர் நளீம் அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட SP19 கிளை தொடர்பான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ்

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, சம்மாந்துறை பிரதேச செயலக எல்லைக்குட்பட்ட புளக் ஜே மேற்கு 1ம் பிரிவில் உள்ள சம்மாந்துறை பல நோக்கு கூட்டுறவு சங்கத்தின் SP19 கிளை அமைந்துள்ள இடம் மற்றும் அதனை அண்டிய ஒரு பகுதி நிலம் புளக் ஜே மேற்கு 1ம் பிரிவில் உள்ள கிராம அபிவிருத்தி சங்கத்தினர் வசம் உள்ளது. இதனை பராமரிப்பதற்கு யாரும் இல்லாதிருப்பதால் மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்குகின்றனர். எனவே இதனை சம்மாந்துறை பிரதேச சபையின் பராமரிப்பின் கீழ் கொண்டு வருமாறும் மிகவும் பணிவாய் வேண்டிக்கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**

அவ் இடத்தை வாசிப்பு நிலையமாக மாற்றுவோம்.

**தீர்மானம் - 04/28/14**

சம்மாந்துறை பலநோக்கு கூட்டுறவு சங்கத்திற்கு சொந்தமான SP19 கிளைக் காணியை வாடகைக்கு சபையின் கீழ் எடுத்து அதனை வாசிப்பு நிலையமாக மாற்றுவதற்கான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் எஸ்.நளீம்
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் எம்.ரீ.பௌசுள்ளாஹ்

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களினால் சமர்ப்பிக்கப்பட்ட அல் அர்ஷத் மகா வித்தியாலயத்தில் மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கு தேவையான வசதிகள் தொடர்பான பிரேரணை.

பிரேரித்தவர் : கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா
ஆமோதித்தவர் : கௌரவ உறுப்பினர் என்.கோவிந்தசாமி

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, அல் அர்ஷத் மகா வித்தியாலயத்தில் மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்காக விசேஷ பிரிவு ஒன்று 2010 ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வருகின்றது. தற்போது இதில் 60 பிள்ளைகள் வரை கல்வி கற்றுக் கொண்டிருக்கின்றார்கள். எனது முயற்சியால் 15 மில்லியன் பெறுமதியான பாடசாலை கட்டடமும் தளபாட வசதிகளும் கொண்ட திட்டம் ஒன்று ஜப்பான் தூதரகத்தின் நிதி உதவியுடன் தற்போது முடியும் தருவாயில் உள்ளது. மேலதிக தேவைகள் அடையாளம் காணப்பட்டு இருப்பதோடு பாடசாலை சமூகம் அதற்கான வளங்களை திரட்டுவதில் மிகவும் தீவிரம் காட்டி வருகிறார்கள். எனவே மாற்றுத்திறனுடைய மாணவர்களுக்கான கற்றல் உபகரணம், வறுமை நிமிர்த்தம் மாற்றுத்திறனுடைய பிள்ளைகளை சில பெற்றோர்கள் போக்குவரத்து வசதி இன்மையால் பாடசாலையை விட்டு இடை நிறுத்தி உள்ளார்கள். இதற்கு பொது போக்குவரத்து அல்லது Three wheeler ஒன்றை பெற்றுக் கொடுத்தல், பாடசாலை அடையும் பாதை திருத்தம், பாடசாலையை ஊடுருவும் வடிகால் அமைத்தல் போன்ற தேவைகளை எமது சபை நிதியில் இருந்து அல்லது ஏதேனும் நிதி மூலத்திலிருந்து நிறைவேற்றுவதற்காக இப் பிரேரணையை சமர்ப்பிக்கின்றேன்.

### கௌரவ தவிசாளர் அவர்கள்:

விசேட தேவையுடைய மாணவர்களுக்கான கற்றல் உபகரணங்கள் மற்றும் ஏனைய வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

### தீர்மானம் - 04/28/15

சது/அல் அர்ஷத் மகா வித்தியாலயத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட தேவையுடைய மாணவர்களுக்காக கற்றல் உபகரண மற்றும் ஏனைய வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்கான பிரேரணை.

| | | |
|---|---|---|
| பிரேரித்தவர் | : கௌரவ உறுப்பினர் | கே.எல்.சிஹாமா |
| ஆமோதித்தவர் | : கௌரவ உறுப்பினர் | என்.கோவிந்தசாமி |

இப் பிரேரணை சபையில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது.

இதற்கமைய கௌரவ உப தவிசாளர் தலைமையில் கௌரவ உறுப்பினர் ஜிப்ரி, கௌரவ உறுப்பினர் சிஹாமா, கௌரவ உறுப்பினர் சரீபா ஆகியோர் கொண்ட குழு தேவையான விடயங்கள் தொடர்பில் எதிர்வரும் கூட்டத்தில் அறிக்கை சமர்ப்பிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

### கௌரவ உறுப்பினர் ஏ.எம்.எம்.றியாஸ் அவர்கள்:

கௌரவ தவிசாளர் அவர்களே, முழு உலகினையுமே அசாதாரண நிலைக்குள்ளாக்கியிருக்கும் கொவிட் 19 தொற்றானது எமது ஆளுகைக்குட்பட்ட சம்மாந்துறை பிரதேச எல்லையினையும் விட்டு வைக்கவில்லை. இந்த அசாதாரண சூழ்நிலையினை வெற்றி கொள்வதற்கு அரசாங்கத்துடன் இணைந்தும், தனித்தும் எமது சபையின் முக்கிய பணிகள், கடமைகளில் ஒன்றான பொதுச் சுகாதாரத்தினை பேணுவதில் இச் சபையின் கௌரவ தவிசாளர் அவர்களின் வழிகாட்டலில் கௌரவ உறுப்பினர்களின் பங்களிப்புடன் செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் இதய சுத்தியுடனான பங்களிப்புக்கள் அளப் பெரியதும், மெச்சத் தக்கதுமாகும். அந்த வரிசையில் கொவிட் 19 தொற்றின் தாக்கமும் அதன் பாதுகாப்பு வழிமுறைகள் பற்றிய விழிப்புணர்வு சம்பந்தமாக ஒலி பெருக்கி மூலம் பொது மக்களுக்கு தொடர் தேர்ச்சியாக அறிவுறுத்தியமை, அரசாங்கத்தினால் வழங்கப்படும் சலுகைகளை மக்களுக்கு பெற்றுக் கொடுப்பதற்கான முயற்சிகள் எடுத்தமை, ஊரடங்கு சட்டம் அமுல்படுத்தப்படும் காலங்களில் நடமாடும் சந்தை ஊடாக மக்களின் காலடியில் அன்றாட பாவனைப் பொருட்களை கொண்டு செல்வதற்கான ஏற்பாடுகள் செய்தமை, அன்றாட பாவனைப் பொருட்களின் கட்டுப்பாட்டு விலை நிர்ணயம் செய்தமை, ஊரடங்கு சட்டம் தளர்த்தப்பட்ட வேளையில் மக்களின் சுகாதார நடவடிக்கைகளை ஒழுங்குபடுத்தியமை, தொற்று நீக்கிகள் விசிறும் பணிக்கு சபை உத்தியோகத்தர்களும், ஊழியர்களும் சம்மாந்துறை சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்துடன் இணைந்து செயற்பட்டமை,

முகக் கவசம் இலவசமாக பொது மக்களுக்கு வினியோகித்தமை, தொற்று நோய் காலங்களில் பொது மக்கள் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் தொடர்பான விளிப்புணர்வு துண்டுப்பிரசுரம் வினியோகித்தமை, தொற்றுக் காலங்களில் கடமையிலுள்ள பொதுச் சுகாதார உத்தியோகத்தர்கள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், பொலிஸார், பாதுகாப்பு படையினர் போன்றோர்களுக்கு தண்ணீர் போத்தல்கள் மற்றும் குளிர்பானங்கள் கடமையில் ஈடுபட்ட இடங்களுக்குச் சென்று வினியோகித்தமை, ஊரடங்கு சட்டம் அமுல் நடாத்தப்பட்ட நாட்களில் நடமாடும் மரக்கறி வியாபாரிகளினால் கட்டுப்பாட்டு விலையில் விற்பனை செய்யப்படுகின்றமை தொடர்பாக கண்டறியும் பரிசோதனையில் சபை உத்தியோகத்தர்களும் பங்களிப்புச் செய்ய வேண்டும் என கௌரவ தவிசாளர், கௌரவ உறுப்பினர்கள் சபையின் உத்தியோகத்தர்களுக்கு பரிந்துரை செய்தமை, கொவிட் 19 பற்றிய பல தரப்பட்ட தரப்பினருடனும், திணைக்களத் தலைவர்களுடனும் கலந்துரையாடல்கள் மூலம் தெளிவூட்டும் நிகழ்வுகள் நடாத்தியமை, சபையின் சேவைகளை பெற்றுக் கொள்ள வரும் மக்களுக்கு உடல் வெப்பநிலை பரிசோதனையின் பின்னர் அலுவலகத்திற்குள் உள்வாங்கப்பட்டு சேவையினைப் பெற்றுக் கொள்ள உதவியமை போன்ற இன்னும் பல வேலைத்திட்டங்களை கௌரவ தவிசாளரின் தலைமையில் செய்திருக்கையில், கௌரவ பிரதேச சபை உறுப்பினர் சிஹாமா சியாஸ் அவர்கள் கடந்த 2020.05.22 ஆம் திகதியன்று தனது முகநூல் பதிவேற்றத்தின் போது,

"கொரோனா வைரஸ் காரணமாக சிரமப்படுபவர்களின் முன்னேற்றத்திற்கு சம்மாந்துறை பிரதேச சபை எந்த பயனுள்ள நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பது குறித்து நான் கவலைப்படுகின்றேன். அதனால்தான் சமூகத்தைச் சேர்ந்த படித்தவர்களுடன் குழுக்களை அமைக்குமாறு நான் கோரியிருந்தேன். ஆனால் தலைவர் அக்கரை காட்டவில்லை" எனக் குறிப்பிட்டிருந்தார். இக் கூற்றின் மூலம் சபையின் கூட்டுப் பொறுப்பினை மீறியமை, கௌரவ தவிசாளரையும், கௌரவ உறுப்பினர்களையும் அவமதிப்புக்குள்ளாக்கியமை, அர்ப்பணிப்புடன் செயற்பட்ட செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்களை எள்ளி நகைப்புக்குள்ளாக்கியமை, இந்த உயர் சபையின் கௌரவத்தினையும், கௌரவ உறுப்பினர்கள், செயலாளர், உத்தியோகத்தர்கள், ஊழியர்களின் மன உளைச்சலுக்குட்படுத்தியதுடன் மானபங்கப்படுத்தியமை, மேலும் தனது முகநூலின் பிறிதொரு சந்தர்ப்பத்தில் "மேற்பார்வை திட்டம்" எனும் தலைப்பில் சபையின் மாதாந்தக் கூட்டத் தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்படுவதை மேற்பார்வை செய்தல் எனும் போர்வையில் கௌரவ தவிசாளரினாலோ அல்லது கௌரவ சபையினராலோ எவ்வித அதிகாரமும் வழங்கப்படாத நிலையில் பொறுப்புள்ள அரச உயர் அதிகாரிகளையும், உத்தியோகத்தர்களையும் ஏமாற்றியமை மட்டுமன்றி அவர்களின் கடமை நேர வீணடிப்புக்களை செய்தமை. எனவே கௌரவ தவிசாளர் அவர்களே கௌரவ உறுப்பினர் சிஹாமா சியாஸ் அவர்களை குறைந்தது மூன்று அமர்வுகளுக்காவது சபை நடவடிக்கைகளிலிருந்து நிறுத்தி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

**கௌரவ உறுப்பினர் எஸ். நளீம் அவர்கள்:**

கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களினால் முன்வைக்கப்பட்ட பிரேரணை தொடர்பாக, சம்மாந்துறை பிரதேச சபைக்கு என்றும், அதன் தவிசாளர் அவர்களுக்கும் முழு நாட்டிலும் தனியான கௌரவம் இருக்கின்றது. எனவே அதற்கு குந்தகம் விளைவிக்கும் வகையில் யார் செயற்பட்டாலும் அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. மேலும் அவ்வாறான சந்தர்ப்பத்தில் சபையின் சட்ட கோவைக்கு அமைய சட்ட நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று கூறியவனாக, இங்கு முன்வைக்கப்பட்டுள்ள கூற்றின் அடிப்படையில் கொவிட் 19 நோய் ஏற்பட்ட காலத்தில் சம்மாந்துறை பிரதேச சபை எந்தவிதமான செயற்பாடுகளையும் மேற்கொள்ளவில்லை மாறாக தாங்கள் செய்வதற்கும் சபை தலைவர் உடன்படவில்லை என்று கூறுவதனையும் தான் முற்றாக கண்டிக்கின்றேன். கொவிட் 19 காலத்தில் எமது சபையினால் மேற்கொள்ளப்பட்ட பணிகள் அளப்பெரியவை. பொதுவாக பொது மக்களுக்கு முகக்கவசம் வழங்கியமை, பொது இடங்களுக்கு கிருமி நாசினிகள் தெளித்தமை, வியாபார நிலயங்களுக்கு சமூக இடைவெளி பேணுவதற்கான ஏற்பாடுகள் செய்தமை, பொது மக்களுக்கு தேவையான மரக்கறி வகைகள் மற்றும் பலசரக்கு பொருட்களை இலகுவாகவும், இலாபமாகவும் பெற்றுக் கொள்ள ஏற்பாடுகள் செய்தமை, மேலும் சபையின் செயலாளர் அவர்கள் கொவிட் 19 காலத்தில்

காலம் நேரம் பாராமல் நிர்வாக கடமைகளை முன்னெடுத்து சென்றமைக்காக இந்த இடத்தில் நன்றி கூற கடமைப்பட்டுள்ளேன்.

கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சபையின் ஊடாக தங்களது வங்குரோத்து அரசியலை மக்கள் மத்தியில் முன்னெடுத்து செல்வதற்காக இந்த சபையையே அல்லது அதன் கௌரவ தவிசாளரையே பயன்படுத்த நினைப்பது அல்லது குறை கூறுவது அவர்களின் அறியாமை ஆகும். எனவேதான் கௌரவ தவிசாளர் அவர்களே, இந்த சபைக்கோ அல்லது அதன் கௌரவ தவிசாளர் அவர்களுக்கோ என்றும் தனியான கௌரவம் இருக்கின்றது என்பதில் எந்தவித ஐயப்பாடும் இல்லை. எனவே நான் இங்கு சில விடயங்களை குறிப்பிடலாம் என்று நினைக்கின்றேன். சம்மாந்துறை பிரதேச சபையை பொறுத்தவரையில் இங்கு 03 கட்சிகளை சேர்ந்த உறுப்பினர்கள் உள்ளோம். ஆனால் இங்கு அரசியலோ, எதிர்ப்புக்களோ, வேறுபாடுகளோ கிடையாது. அவ்வாறு இருப்பின் என்னுடைய அபிவிருத்திகளுக்கு தடையாக இருந்திருக்கலாம். கௌரவ தவிசாளர் அவர்கள் மாறாக எனக்கு அவர் சிறந்த ஒரு வழிகாட்டியாக இருந்தார். அதனால் தான் என்னுடைய அபிவிருத்திகளை செய்வதற்கும் தடைகளை தாண்டுவதற்கும் இலகுவாக இருந்தது. குறிப்பாக நான் இந்த சபை ஊடாகவும் சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் ஊடாகவும் செய்த வேலையை கூற விரும்புகின்றேன். ஏனெனில் தன்னால் மாத்திரம்தான் எதையும் செய்ய முடியும். மற்றவர்களால் எதுவும் செய்ய முடியாது என்ற சொற்பிரயோகத்திற்கு அமைவாக கூறுகின்றேன்.

கௌரவ உறுப்பினர் அவர்களே, என்னைப் பொறுத்தவரை நான் இந்த சபையில் எதிர்க்கட்சி உறுப்பினராகத்தான் இந்த வேலைகளை செய்திருக்கின்றோம். நகரத் திட்டமிடல் நீர்வழங்கல் அமைச்சின் ஊடாக 09 மில்லியன் பணம் சிறுவர் பூங்கா மற்றும் வீதி அபிவிருத்திக்காக, அவ்வாறே கம்பரெலிய வேலைத் திட்டத்தின் ஊடாக முன்னால் கௌரவ இராஜாங்க அமைச்சர் H.M.M. ஹரீஸ் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் பள்ளிவாயல்கள் மற்றும் வீதி அபிவிருத்திக்காகவும், 11.5 மில்லியன் ரூபாவும் எனது வட்டாரத்தில் உள்ள புளக் ஜே மேற்கு இரண்டாம் பிரிவில் உள்ள S வாய்க்கால் நிர்மானிக்கப்பட்ட பாலம் 17.5 மில்லியன் ரூபாவும் ஆகும். மேலும் கௌரவ முன்னால் சுகாதார சுதேஸ இராஜாங்க அமைச்சர் M.C. பைஸால் காஸிம் அவர்களின் நிதி ஒதுக்கீட்டில் வீதி அபிவிருத்திக்காக 4 மில்லியன் ரூபாவும், பள்ளிவாசல் அபிவிருத்திக்கு 2.5 மில்லியன் ரூபாவும், செந்நெல் கிராமம் வைத்தியசாலைக் கட்டிடத்திற்கு முதற்கட்ட வேலைகளுக்கு 15 மில்லியன் ரூபாவும் பெறுமதியான அபிவிருத்திகள் ஆகும். மேலும் முன்னால் கௌரவ பாராளுமன்ற உறுப்பினர் M.I.M.மன்சூர் அவர்களினால் பாதைகள் மற்றும் வடிகான் அமைப்பதற்காக 12 மில்லியன் ரூபாவும் பள்ளிவாயல்கள் அபிவிருத்திக்கு 6 மில்லியன் ரூபாவும் பெறுமதியான அபிவிருத்திகள் ஆகும். மேலும் கௌரவ முன்னால் பாராளுமன்ற உறுப்பினர் A.L.M.நஸீர் அவர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் வீதி அபிவிருத்திக்காகவும், பள்ளிவாயல் அபிவிருத்திக்காகவும் 4.5 மில்லியன் ரூபா பெறுமதியான வேலைத்திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன. இருப்பினும் கௌரவ தவிசாளர் அவர்கள் நினைத்திருந்தால் இவ் வேலைத்திட்டங்கள் எதிர் அணியினரால் கொண்டுவரப்பட்ட வேலை எனவே இந்த மண்ணின் மீது அக்கரை இல்லாத ஒருவராக இருந்திரந்தால் இதனை ஏதோ ஒரு காரணத்திற்காக தடுத்து நிறுத்தியிருக்கலாம். மாறாக அவர் அதற்கு ஆதரவாகவே செயற்பட்டார். எனவே இவ் வேலைத் திட்டங்கள் அனைத்தும் எமது சபைக்கு வெளியே இருந்து கொண்டுவரப்பட்ட நிதிகள் ஆகும். மாறாக இந்த சபையின் ஊடாக செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் கைகாட்டி சிறுவர் பூங்காவிற்கான சுற்று வேலி அமைப்பதற்காக 5 இலட்சம் ரூபாவும், புதிய மின் விளக்குகள் 68 பொருத்தப்பட்டிருக்கின்றது. பழுதடைந்த மின்விளக்குகள் 96 திருத்தித் தந்தமை.

மல்காம்பிட்டி வட்டாரத்திற்காக திண்மக்கழிவு அகற்றுதல் சேவைகளை மேற்கொள்ள ஆவண செய்தமை, ஆதம்கனியார் வீதி மற்றும் டி.எஸ் குறுக்கு வீதிகளுக்கான அனைக்கட்டுவதற்கு 80000/- ரூபாவும், 13 தடவைகள் JCB வாகனத்தையும், 02 தடவைகள் மோட்டர் கிறேடர் வாகனத்தையும், 17 தடவைகள் உழவு இயந்திரத்தையும் பயன்படுத்துவதற்கு ஆவண செய்தமை. மேலும், பிஸ்மில்லா பாலர் பாடசாலை, பாத்திமா பாலர் பாடசாலை போன்றவற்றை புணர் நிர்மானம் செய்வதற்கு நிதி ஒதுக்கியவை போன்ற செயற்பாடுகள் கருத்து வேறுபாடுகளுக்கு அப்பால் அவரது ஒற்றுமைதான் காரணம். எனவேதான் கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ

உறுப்பினர்கள் இன்று சபைகளுக்கிடையில் ஒற்றுமை இல்லாததன் காரணமாகவும், தவிசாளர் ஒற்றுமையினாலும் பல கோடிக்கணக்கான நிதிகள் திருப்பி அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. ஆனால் அவ்வாறான ஒரு நிலையை என்னால் இந்த சபையில் தோற்றுவிப்பதற்கு அனுமதி அளிக்க முடியாது. ஆகவேதான் கௌரவ உறுப்பினர்களே எங்களுக்கு இவ்வாறான ஒரு தவிசாளர் கிடைத்தமைக்காக நாங்கள் மென்மேலும் பெருமிதம் அடைய வேண்டும். ஏனென்றால் நான் செந்நெல் கிராமம் வைத்தியசாலை காணி அமையப்பெற்று இருந்த இடம் சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் பராமரிப்பில் இருந்தது. இதனை சுகாதார அமைச்சின் கீழ் மாற்றுவதற்காக கிழக்கு மாகாண கௌரவ ஆளுனர் றோஹித்த போகல்லாம அவர்களை சந்திப்பதற்காக அவரின் செயலாளரின் அனுமதியினை பெற சென்றிருந்தேன். அப்போது அவர் என்னிடம் பேசிக்கொண்டிருக்கும் போது எதற்காக வந்தீர்கள், எங்கிருந்து வந்தீர்கள் என்று என்னிடம் கேட்டார். அப்போது நான் சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் என்று கூறினேன். அப்படியாயின் உங்கள் தவிசாளர் நௌசாட் அவர்களா? என்று கேட்டார். ஆம் என கூறினேன். எனக்கு அங்கு தனியான கௌரவம் கிடைத்தது. மேலும் அவர் கூறுகையில் உங்களுடைய தவிசாளர் நல்ல நிர்வாக திறமை உள்ளவர். என்னுடைய நல்ல நண்பர் அவரை பார்க்கும் போது எனக்கு உங்கள் தலைவர் அஷ்ரப் அவர்களின் ஞாபகம் வருகின்றது என கூறி நன்றாக உபசரித்தார். அவ்வாறே தான் எனது வட்டாரத்தில் பாதுகாப்பற்ற சிறுவர் சிறுமியர்களை அக்கரைப்பற்று சிறுவர் பாதுகாப்பு நிதியத்தில் சேர்ப்பதற்காக சென்ற போது அதனை நிவர்த்தி செய்வதற்காக அம்பாரை மாவட்ட அரசாங்க அதிபர் அவர்களின் உதவியினை நாட வேண்டி ஏற்பட்டது. அப்போது அவர்களை சந்தித்து பேசிய போது இது சம்மந்தமான தெளிவினை உங்கள் தவிசாளரிடம் பெற்றிருக்கலாம் எனக் கூறினார்.

எனவே தான் எங்கு சென்றாலும் எமது கௌரவ தவிசாளருக்கு என தனியான கௌரவம் உள்ளது. இவற்றை ஏன் கூறுகின்றேன் என்றால் இந்த சபையில் நான் எதிரணி உறுப்பினராக இருந்த போதும் எந்த வேறுபாடும் இல்லாமல் அவரது நிர்வாக திறமையின் காரணமாக வழிநடாத்துகின்றார். எனவே இவற்றை ஏன் கூறுகின்றேன் என்றால் கொவிட் 19 காலத்தில் சில அனுபம் இல்லாத சபைகளால் மேற்கொள்ளப்பட்ட வாழ்வாதார உதவிகள் எமது சபையால் செய்யப்படவில்லை, எனக்கு கிடைக்கவில்லை என்பதற்காகவும், தன்னால் மட்டும் செய்தேன் வேறு எவரும் எதனையும் செய்யவில்லை என்று கூறி இந்த சபைக்கு களங்கம் விளைவிக்கும் வகையில் நடந்து கொண்டமைக்காகவும் மிகவும் வன்மையாக கண்டிக்கின்றேன் என்று கூறுவதோடு இதற்காக எமது சபையின் சட்டத்திற்கு அமைவாக அதி கூடிய தண்டனை வழங்க வேண்டும் என்று கூறி, மேலும் என்னுடைய மொத்தமாக 88.7 மில்லியன் ரூபாவுக்கான அபிவிருத்திகளுக்கு ஆவண செய்தமைக்காக நன்றி கூறி விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் ஏ.யூசுப் லெப்பை அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, நானும் இப் பிரேரணைக்கு ஆதரவாக ஒப்பமிட்டவன் என்ற அடிப்படையில் இந்த கருத்தை முன்வைக்கின்றேன். இப் பிரதேச சபையில் இருக்கின்ற கட்டுபடாத நிலையில் எங்களுக்குள் இருக்கின்ற கருத்து வேறுபாடுகள் அனைத்தையும் இந்த சபை அமர்வின் போது வேண்டியளவு பேசிக்கொள்ளலாம். கட்டுப்பாடுகள் பிரதேச சபையினுடைய சட்டதிட்டங்களுக்கு அமைவாகவும் பேச வேண்டும். எங்களது கௌரவ உறுப்பினர்கள் சிலர் எல்லை மீறுகின்றார்கள் அதை ஞாபகப்படுத்துகின்றேன். எனவே அந்த நிலையில் எமது கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் செய்கின்ற சில நடவடிக்கைகள் இந்த Face Book அரசியல் என்பது உண்மையிலே நாங்கள் கௌரவ உறுப்பினர்களாக இருக்கின்றபடியினால் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் Face Book அரசியலில் இருந்து விடுபட வேண்டும். அவருக்கு ஒரு புத்தி கூறுகின்ற அடிப்படையில்தான் கூறுகின்றேன். அவர் செய்தது தவறுதான் என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. அதனோடு எங்களது பிரதேச சபையின் கௌரவ தவிசாளர் அவர்கள் ஒன்றும் செய்யவிடவில்லை என்ற சொற்பிரயோகம் எனக்கும் கவலையாக இருந்தது. ஏனென்றால் ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கத்தின் போது நான் 10 கோடி ரூபாவுக்கு மேற்பட்ட இவ் ஊருக்கான முயற்சிகளை மேற்கொண்ட போது இச் சேவைகளை நான் செய்திருக்கின்றேன். அதற்கு எங்களது கௌரவ தவிசாளர் அவர்கள் எந்த வகையிலும் அவர் எனக்கு தடையாக

இருந்ததில்லை. இன்னும் வேணுமென்றாலும் கொண்டு வாருங்கள் இவ் ஊரை முன்னேற்றுங்கள் என்று கூறினார்.

எனவே எங்களுக்கு இவ்வாறான சபைக்கு இவ்வாறான ஒரு அனுபவமிக்க தவிசாளர் கிடைத்ததற்கு நாம் எல்லோரும் இறைவனுக்கு நன்றி கூற வேண்டும். இந்த ஊரும் நன்றி கூற வேண்டும். இந்த அடிப்படையில் எமது கௌரவ தவிசாளர் அவர்களை ஒன்றுக்கும் விடுகிறார் இல்லை என்ற சொற்பிரயோகத்தை இனியாவது நீங்கள் பாவிக்கக் கூடாது. Covid 19 காலத்தில் எதுவும் செய்யவில்லை என்ற ஒரு கருத்தும் அதில் உள்வாங்கப்பட்டது. உண்மையிலே Covid 19 Programme இற்கு ஒரு குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. அக் குழுவில் சட்ட ரீதியாக எங்களது தவிசாளர் இல்லை என்றுதான் நினைக்கின்றேன். இருந்தாலும் கூட இவ் ஊரின் பிதாமகன் என்ற அடிப்படையில் அவர் அதில் இணைத்துக் கொண்டு ஏகப்பட்ட செயற்பாடுகளை மேற்கொண்டிருக்கின்றார் என்பது கண் ஊடாக காணக்கூடியதாக இருக்கின்றது. எனவே அந்தக் கருத்தும் தவறான கருத்து என்பதனை கூறிக்கொள்ள விரும்புகின்றேன். நீங்கள் மாத்திரமல்ல நாங்களும் அதிகம் பேர் புதிதாக சபைக்கு வந்த உறுப்பினர்கள் என்ற அடிப்படையில் எமது அனுபவத்திற்கு ஏற்றால் போல் சில பிழைகளை மேற்கொள்ளலாம் அல்லது அறியாமல் பேசலாம். இப்படியான தவறுகளை உணர வேண்டும்.

ஏனென்றால் கௌரவ தவிசாளர் அவர்கள் உங்களுக்கு இதே சபையில் பல தடவை அறிவுரை மறைமுகமாகவும், நேரடியாகவும் கூறியிருக்கின்றார். இருந்த போதிலும் நீங்கள் அதை காதிற்கு எடுத்ததாக தெரியவில்லை. அது எமது சபையின் ஒழுக்க கட்டுப்பாட்டை சிதைவடையச் செய்கின்றது. ஆகவே நீங்கள் அப்படிப்பட்ட சில விடயங்களில் இருந்து இனியாவது இப்படியான தவறுகளை விடக் கூடாது. இச் சபையில் என்னவென்றாலும் நான் பேச வேண்டும், FB இன் மூலம் அரசியல் செய்வதும் சபை கௌரவ உறுப்பினர்களுக்கு பொருத்தமற்ற செயல் என்பது எனது கருத்தாக இருக்கின்றபடியினால் இனிவரும் காலங்களிலாவது இதில் இருந்து திருந்திக் கொள்ள வேண்டும். அதற்காக உச்ச பட்ச தண்டனை 03 மாதம் வழங்குவது என்பது அவரது உறுப்புரிமையை இல்லாமல் செய்யக்கூடிய நிலையை ஏற்படுத்தும். எனவே நாம் அவருக்கு எல்லோரும் புத்திமதியை கூறி ஏனென்றால் கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் செயல் வீரப்பெண்மணி என்றுதான் கூற வேண்டும். அவரால் ஏற்பட்ட தவறை அவர் இன்றிலிருந்து உணர வேண்டும். அதற்கு நாமும் ஒரு சந்தர்ப்பத்தை வழங்கி அதிக பட்ச தண்டனை வழங்காமல் அவருக்கு விளக்கத்தை கொடுத்து ஒரு இறுக்கமான கட்டளையை வழங்க வேண்டும் என்பது எனது கருத்து. கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களது அறிக்கையில் ஒன்று கூறப்பட்டுள்ளது. அதாவது படித்தவர்களைக் கொண்டு குழுக்களை அமைக்கப்படவில்லை என்று எமது கௌரவ தவிசாளர் அவர்களிடம் சுட்டிக்காட்டியுள்ளார். உண்மையிலே அக் குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றதா என்பது எனக்கு இதுவரை தெரியாமல் இருக்கின்றது. நான் நினைக்கின்றேன். 4வது அல்லது 5வது சபை அமர்வின் போது அப்படியான குழுக்களுக்கு ஒவ்வொரு அமைப்புகளுக்கும் படித்தவர்கள், இவ் ஊரில் உள்ளவர்களின் பட்டியலை சொன்ன போது கௌரவ தவிசாளர் அவர்கள் வாசிக்க வேண்டாம் என்னிடம் ஒப்படையுங்கள் என்று சொன்னார். நான் சென்று ஒப்படைத்திருக்கின்றேன். அதையும் ஞாபகம்ஊட்டியவனாக விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எம்.எஸ்.சரீபா அவர்கள்:**
கௌரவ தவிசளர் அவர்களே, இச் சபை அமைக்கப்பட்ட காலத்தில் இருந்து இந்த சபைக்கு உள்வாங்கப்பட்டதில் இருந்து பெண்களுக்கான சில பயிற்சி நெறிகள் நடாத்தப்பட்டிருந்தது. அந்த நேரத்தில் உள்ளூராட்சி மன்றங்கள், மாநகர சபைகள் போன்ற இடங்களில் இருந்து கேள்விகள் கேட்கப்படும் போது எங்களது தவிசாளர் பேசவிடுவதில்லை என்ற சொற்பிரயோகங்கள் பாவிக்கப்பட்டது. இதே நேரம் சம்மாந்துறை இல் இருக்கும் பெண் உறுப்பினர்களின் வாயில் இருந்து வரும் சொல் என்னவென்றால் எங்களது தவிசாளர் எங்களுக்கு எந்த வகையிலும் இடைஞ்சல் இல்லை. அவர் எங்களுக்கு எப்போதும் ஆதரவாக இருக்கின்றார் என்ற வார்த்தைதான். ஆனால் தற்போது எங்களது கௌரவ உறுப்பினர் சிஹாமா சியாஸ் அவர்களினால் வெளியிடப்பட்ட முகநூலை பார்த்தவுடன் எனக்கு பெண்கள் அரசியல் என்று கொழும்பில்

பதியப்பட்டுள்ளது. நான் இறுதியாக அந்தக் கூட்டத்திற்கு சென்று வந்த ஒரு தலைமைத்துவம். அதில் இருந்து கேட்கப்பட்டது என்னவென்றால் Whatsapp ஊடாக கௌரவ உறுப்பினர் சரிபா அவர்களே, நீங்கள் சம்மாந்துறை தவிசாளரைப் பற்றி மிகவும் நல்ல ஒரு செயலாக வாசித்து வந்தீர்கள்.

ஆனால் தற்போது உங்களது கௌரவ பெண் உறுப்பினர் ஒருவர் முகநூலில் வெளியிட்டிருக்கிறார் தலைவர் எல்லாவற்றையும் தடுக்கிறார் என்று, இதற்கு நீங்கள் பதில் அளிக்க வேண்டும் என்று கேட்டு ஒரு மணித்தியாலயம் உரையாடிக் கொண்டிருந்தார்கள். மிகவும் மன வேதனையாக இருந்தது. அந்த நேரம் நான் அதற்கு ஒரு Comment ஒன்று செய்யும் போது அந்த Comment தூக்கப்பட்டது. இதை இடவேண்டாம் ஏனென்றால் எங்கள் ஊரைப் பொருத்தவரையில் இந்த சபையைப் பொருத்தவறையில் எல்லோரும் ஒற்றுமை. அண்மையில் கூட கௌரவ உறுப்பினர் றியாஸ் அவர்களை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகரிடம் அழைத்து பேசிக் கொண்டிருக்கும் போது அவர் எந்தக் கட்சி என்று கேட்டார், கட்சி எப்படி என்றாலும் நீங்கள் இப்படி ஒற்றுமை என்று, அந்த நேரம் நான் கூறினேன் தவிசாளரும் அப்படி. அதனால் நாங்களும் அப்படி என்று, தற்போது அதை ஒரு அவமானப் பெயராக வாங்கிக் கொண்டோமே என்றுகூறி வெட்கப்பட்டு தலை குனிந்தேன் நான்.

அத்தோடு படித்தவர்கள்தான் குழு அமைக்க வேண்டும். அது என்ன படித்தவர்கள் என்றால் ஏன் மற்றவர்கள் படிக்காமல் வந்திருக்கின்றார்களா? எல்லோரும் படித்தவர்கள்தான் பள்ளிக்கூடம்தான் சென்று படிக்க வேண்டும் என்று இல்லை, பண்பாட்டுடனான கல்வியும் மனிதர்களிடம் இருக்கு என்பதனை மறந்துவிடக்கூடாது. பிரதேச சபை என்பது மக்களுக்காக ஆற்றப்பட்ட சபை. மக்கள் எல்லோரும் வரலாம். இது மட்டுமல்ல நான் சென்ற சபை கூட்டறிக்கையில் கேட்டுக்கொண்டேன் முகநூலில் இருக்கின்ற இருட்டுப்படத்தை எடுக்க வேண்டும் என்று ஆனால் அதை எடுக்கவில்லை. எவ்வளவு வேதனையான விடயம். வைத்திய அத்தியட்சகர் இப்போதும் சொல்கிறார் அந்தப் படம் எனக்கு பார்க்க வெட்கமாக இருக்கின்றது என்று, எனக்கும் வெட்கமாக இருக்கின்றது. ஒரு இருட்டறையில் நானும் வைத்திய அத்தியட்சகரும் ஒரு இரகசியம் பேசிக்கொண்டிருப்பது போல் இருக்கின்றது. எனக்கு மிகவும் மனவேதனை. நான் வேறு கட்சியாக இருந்தாலும் எனது இரு பாதைகள் தடுக்கப்பட்ட போது உடனடியாக கௌரவ தவிசாளர் அவர்களிடம் பிரதேச செயலக பாதை போகப்போகுது என்று அதற்கு அவர் உடனடியாக DS ஊடாக கதைத்து செயலாளர் சொன்னார் என்னிடம் இந்த வீதி செய்வதற்கு அனுமதி கிடைத்துவிட்டது. நீங்கள் உடனே செய்யலாம் என்று கூறினார். நானும் வைத்தியசாலைக்கு இயந்திரம் கேட்பது, சில விடயங்கள் கேட்பது. எந்த நேரத்திலும் உதவி செய்வதற்கு காத்துக்கொண்டிருக்கிறார். எனது கௌரவ தலைவர் மான்புமிகு அல் ஹாஜ் ரவுப் ஹக்கீம் அவர்கள் சொன்னார் உங்களது தவிசாளரிடம் நீங்கள் சில அறிவுரைகளை பெற்றுக்கொள்ளுங்கள் என்று,

அரசியல் எல்லோரும் செய்யலாம் நானும் செய்யலாம். நான் தற்போது இதில் இருக்கலாம் அல்லது வேறு இடத்துக்கு போகலாம். மற்றவர்களும் போகலாம். எல்லோருக்கும் தனிப்பட்ட திறமை இருக்கின்றது. பெண் உறுப்பினர் கௌரவ நிலுஷ்பா, கௌரவ இன்பவதி அதே போல் நான் எத்தனையோ தரம் பஸ்களில் ஏறி எத்தனையோ அபிவிருத்திகளை எடுத்துக்கொண்டு வந்திருக்கின்றார்கள். ஏன் இதையெல்லாம் வெளிப்படுத்தவில்லை. எமது சபை ஒற்றுமையானது ஒற்றுமையாக செயற்பட வேண்டும் என்பதால். நான் காலையில் வேலை முடிந்து வருகின்ற நேரமும், இரவு 9 மணிக்கு வேலைக்கு செல்கின்ற போதும் எங்களது கௌரவ தவிசாளர் உட்பட எமது செயலாளர் அவர்கள் நடமாடிக் கொண்டிருப்பார்கள். நான் யோசிப்பேன் ஏன் இந்த நேரத்திலும் இச் சேவையை செய்துகொண்டிருக்கிறார்கள் என்று, செயலாளருக்கு நேரம் போதாது இந்த கூட்டறிக்கை எழுதுவதற்கு ஏன் அவருக்கு இப்படியான மனவேதனையான விடயம். கௌரவ தவிசாளர் அவர்கள் என்ன நினைத்தார்கள் என்றால் கொவிட் 19 பற்றி தான் மட்டும் பாதிக்கப்பட்டு மரணித்தால் பரவாயில்லை எனது உறுப்பினர்கள் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற என்னத்தில் இருந்தார். இவ் வேலையை செய்யவில்லை இவைகள் வீணற்ற விடயம் முகநூல் என்பது இவ்வாறான அரசியல் செய்வதற்கல்ல. பெண்கள் என்றால் பெண்களுக்காக பேசுங்கள் அதற்காக தலைவர் என்னை தடுத்தார் என்றால் எந்த வகையில் ஏற்றுக் கொள்ளலாம், மன்னிப்பது எப்படி?

மன்னிக்க மனம் வேண்டும் ஆனால் மன்னிக்க இயலாது. இந்த விடயத்தில் மன்னிப்பு ஒன்று என்றால் அது எழுத்து மூலமாக எல்லோர் ஊடாகவும் கேட்டு கௌரவ தவிசாளரிடம் வர வேண்டும் என்பதை கூறிக் கொண்டு விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் எஸ்.எம்.எஸ்.நிலுவ்பா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கடந்த 5ம் மாதம் 22ஆந் திகதி அதிகாலை 4 மணியளவில் கௌரவ உறுப்பினர் சிஹாமா சியாஸ் அவர்களது முக நூலைப் பார்த்தேன். ஒரு Posting ஒன்று போடுபட்டுள்ளது. அது மிகவும் மனவேதனைக்குரிய விடயம் ஏனென்றால் Covid 19 உலக வல்லரசு நாடுகளையே வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் போல் வல்லவனுகளையே புல்லாக மாற்றியது கொவிட் 19 வைரஸ். அந்த வைரஸ் தாக்கத்தினால் சம்மாந்துறை பிரதேச சபை ஒன்றும் விதிவிலக்கல்ல. சம்மாந்துறை பிரதேச சபை ஊடாக உலர் உணவு பொருட்கள் பாதிக்கப்பட்ட மக்களுக்கு கொடுக்க வேண்டும் என்று மிகவும் வன்மையாக கேட்டு பிரச்சினையிட்டு மன்னிப்பு கேட்டிருக்கின்றேன். ஏன் அது எனது அறியாமை. நான் இப் பிரதேச சபை உறுப்பினராக பிரதேச சபைக்குள் வரும் போது ஒரு ஆரம்பக் கல்வி அனுபவம் கூட இல்லாத சிறிய மாணவியாகத்தான் இதற்குள் ஒரு உறுப்பினராக வந்தேன். தற்போது அரசியல் என்றால் என்ன, பிரதேச சபை உறுப்பினர் என்றால் என்ன என்று உங்களுடைய அனுபவம் ரீதியாக எங்களுக்கு கற்பித்து தந்திருக்கின்றீர்கள். அதாவது நிறைய Workshop களுக்கு செல்கின்ற போது பிரதேச சபைகளை பற்றி கேட்கும் போது எமது சம்மாந்துறை பிரதேச சபை ஒரு வரலாற்றில் பொறிக்கக்கூடிய அளவிற்கு இருந்தது.

கௌரவ உறுப்பினர் சிஹாமா சியாஸ் அவர்களின் பதிவேட்டில் இருந்தது தலைவர் சம்மதிக்கவில்லை என்று அதாவது எங்கள் எல்லோருக்கும் ஒரு சுற்றுநிரூபம் வழங்கப்படிட்டிருந்தது. அதில் பிரதேச சபையின் நிதியில் இருந்து இவ் வேலைகள் செய்ய இயலாது என்று, நாங்கள் எல்லோரும் பார்த்திருக்கின்றோம். அப்படி இருந்தும் கூட செய்யவில்லை என்று சொல்லும் போது இருக்கின்ற வேலையை செய்யவில்லை ஏன் அவவால் செய்ய இயலும் என்பதை கௌரவ தவிசாளர் உட்பட ஏனைய 19 உறுப்பினர்களால் செய்ய இயலாதா என்ற கேள்வி மக்களிடம் இருந்து எங்களிடம் வந்தது. அந்த இடத்தில் அக் கேள்விக்கு பதில் சொல்ல இயலாமல் இருந்தது. முகநூல் என்பது குறிப்பிட்ட சம்மாந்துறை பிரதேச சபை 20 உறுப்பினர்கள் பார்ப்பது இல்லை. உலகமே அறியாதவர்களிடம் அறிமுகம் வைத்துக் கொள்வதுதான் முகநூல். இப் பதிவேட்டின் காரணமாக கௌரவ உறுப்பினர்களுக்கு அவர் செய்தது தவறா, சரியா என்பது என்னால் தீர்மானிக்க முடியாது. கௌரவ தவிசாளர் அவர்களுக்கு இது மிகவும் மன வேதனைக்குரிய விடயம் என்பதால் நானும் அதற்கு சாதகமாக ஒப்பம் வைத்துள்ளேன். நான் அதனை வன்மையாக கண்டித்தவளாக விடைபெறுகின்றேன்.

**கௌரவ உறுப்பினர் கே.எல்.சிஹாமா அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, இது தொடர்பான விளக்கம் தரவேண்டும். அத்தோடு இவர்களால் முன்வைக்கப்படுகின்ற குற்றச்சாட்டு உண்மைத் தன்மை அறிய ACLG சுயாதீனமான குழுவை நிறுவி ஒப்பமிட்ட சகலரையும் விசாரணை செய்யுமாறு கௌரவ தவிசாளர் அவர்களை கேட்டுக் கொள்கின்றேன். முக்கியமாக இக் குழுவில் இச் சபையில் உள்ள கௌரவ உறுப்பினர்கள் உள்வாங்கக் கூடாது. மாறாக இவர்கள் சொல்லுகின்ற பொய்யான குற்றச்சாட்டை வைத்து என்னை இடைநிறுத்தவோ, வேறு நடவடிக்கை எடுக்கவோ நீங்கள் அனுமதிக்கக் கூடாது என்பதையும் தெரிவித்தவளாக எனது விடயத்திற்குள் வருகின்றேன். தனித்தும் கூட்டாகவும் கௌரவ உறுப்பினர்களின் கண்டனத் தீர்மானம் இது தொடர்பாக கௌரவ உறுப்பினர் றியாஸ் உட்பட கௌரவ உறுப்பினர் ஜிப்ரி, கௌரவ உறுப்பினர் சஹீல், கௌரவ உறுப்பினர் யூசுப்லெப்பை, கௌரவ உறுப்பினர் இன்பவதி, கௌரவ உறுப்பினர் சரீபா, கௌரவ உறுப்பினர் நளீம், கௌரவ உறுப்பினர் நஜீம், கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி, கௌரவ உறுப்பினர் வளர்மதி, கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ், கௌரவ உறுப்பினர் நிலுவ்பா அவர்களால் குறிப்பிட்ட விடயம் தொடர்பாக போதிய தெளிவின்மை காரணமாகதான் இந்த கண்டனப் பிரேரணை வந்துள்ளது. இதனை தெளிவுபடுத்துவது எனது கடமை, பொறுப்பு. சபையின் தீர்மானமாக இங்கு சபைக்கு எடுக்க வேண்டும் என்றால் 07 நாட்கள் வேலை நாட்களாகவும், சனி, ஞாயிறு தவிர்ந்த விடுமுறை

நாள் தவிர்ந்துதான் இப் பிரேரணை எடுக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால் இப் பிரேரணை ஜுன் 01ம் திகதி வழங்கப்பட்டுள்ளது. இதனை செயலாளர் அவர்கள் பெற்றிருக்கின்றார். அதில் வேலை நாட்கள் 03 ஆகும் பரவாயில்லை. இது எல்லோரும் சேர்ந்து எடுக்கப்பட்டதன் காரணமாக,

ஆகவே அதற்கான மேலதிக விளக்கங்களையும், தெளிவுகளையும், நியாயங்களையும் நான் உங்களுக்கு முன்வைக்க கடமைப்பட்டிருக்கின்றேன். அதனால் விளக்கம் தருகின்றேன். இங்கு குறிப்பிட்ட முகநூலில் கொரோனா வைரஸ் காரணமாக சிரமப்படுபவர்களின் முன்னேற்றத்திற்கு சம்மாந்துறை பிரதேச சபை எந்தப் பயனுள்ள நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்பது குறித்து நான் கவலைப்படுகின்றேன். அதனால்தான் சமூகத்தை சேர்ந்த படித்தவர்களுடன் குழுக்களை அமைக்குமாறு நான் கோரியிருந்தேன். ஆனால் தலைவர் அக்கரை காட்டவில்லை என குறிப்பிட்டு இருந்தேன். இங்கு தலைவர் கொரோனா வைரஸிற்கு வேலை செய்யவில்லை என்று குற்றஞ்சாட்டவில்லை. பயனுள்ள நடவடிக்கைகளை எடுக்கவில்லை என்றுதான் கூறினேன். இந்த வரி போட்ட அன்றைய தினம் எமது கௌரவ உறுப்பினர் நளீம் அவர்கள் சொன்ன மாதிரி வேறு சபைகளும் சொல்லியிருக்கலாம் இப்படியான கதைகளை கொண்டு, அன்றைய தினம் நான் கௌரவ தவிசாளர் அவர்களிடம் வந்து இது பெருநாள் காலம் MOH Office இல் இருந்து முறைப்பாடு வருகின்றது. PHI களை கண்டவுடன் மாத்திரம்தான் முகத்தை மூடுகின்றார்கள். சன நெருக்கமாக நின்று பொருட்களை வாங்குகின்றார்கள். நான் கௌரவ தவிசாளர் அவர்களிடம் கேட்ட விடயம் எமது சபையின் ஊடாக அக் கடைகளை அனைத்தையும் பெருநாள் காலத்தில் மூடிவைக்கலாம் என நினைக்கின்றேன் அதை எமது சபை ஊடாக செய்யலாமா என்று கேட்ட போது அரசாங்கமே அதை திறந்து வைத்திருக்கும் போது நாங்கள் அவ்வாறு செய்ய இயலாது என்று தெரிவித்தார். இது உண்மையான கருத்து நானும் ஏற்றுக்கொண்டேன். ஆனால் அதே நிமிடம் கிண்ணியா நகர சபையின் மேயர் கொரோனா வைரஸிலிருந்து ஊரை பாதுகாத்து விடுவிப்பதற்காக அவர் வர்த்தக நிலையங்களை மூடினார். அவ்வாறு அவருக்கு செய்ய முடிந்த விடயத்தை நமக்கு செய்ய முடியாதா? அதனால்தான் கொரோனா வைரஸ் காரணமாக சிரமப்படுபவர்களின் முன்னேற்றத்திற்கு சம்மாந்துறை பிரதேச சபை எந்தப் பயனுள்ள நடவடிக்கைகளையும் எடுக்கவில்லை என்ற கருத்தின் படி செய்யவில்லை என்று சொல்லவில்லை. பயனுள்ள நடவடிக்கை எடுக்கவில்லை என்றுதான் நான் அவ்விடத்தில் தெரிவித்தேன். அதுமட்டுமல்ல நான் இதில் தலைவர் அக்கறை காட்டவில்லை என்று சொல்லவில்லை. அவ்வாறு இருக்கும் போது நான் ஒரு தடவை செயலாளரிடம் வந்து நாங்கள் கடைக்குள் ஆட்கள் போட்டு செய்யலாமா என்று கேட்டதற்கு நாங்களே 4,5 பேர்தான் வருகின்றோம்.

நாங்கள் காலை 6 மணிக்கு வந்து இரவு 10 மணியளவில் போகின்றோம் என்று எனக்கு அவர் கூறும் போது மன வேதனையாகத்தான் இருந்தது. அன்று நாங்களும் வந்து வேலை செய்ய வேண்டும் என்று நினைத்தோம். அந்த மனோ நிலையில்தான் இருந்தோம். எங்களுக்கு கொரோனா வரும் என்று பாதுகாத்து ஓடவில்லை. ஆகவே அந்த நேரம் இல்லை என்று சொன்னார். அந்த இடத்தில் தான் இதை குறிப்பிட்டு இருந்தேன். அதனால் தான் சமூகத்தை சேர்ந்த படித்தவர்களுடன் குழுக்களை அமைக்குமாறு நான் கோரியிருந்தேன். இந்த குழுக்களை அமைத்து இருந்தால் நாங்கள் அவர்களைக் கொண்டு இவ்வாறான வேலைகளை சரியான முறையிலும் ஒழுங்கான முறையிலும் நாங்கள் அதை செய்திருக்கலாம். அந்த கருத்தை மையமாக எடுத்தேனே தவிர நான் தகப்பன் அந்தஸ்தில் இருக்கின்ற கௌரவ தவிசாளர் அவர்களை அவருடைய நேர்மையை நேசிக்கக்கூடியவள் நான், அவருடைய நேரசூசியை நேசிக்கக்கூடியவள் நான் அவ்வாறு இருக்கும் போது எங்களுடைய தவிசாளருக்கு உள்ளத்தில் என்னைப் பற்றி ஒரு குறிப்பு இருக்கும். என்னிடம் பிழைகள் இருந்தால் என்னை குட்டியே சொல்வார் இது பிழை என்று அந்த தருணத்தில் அந்த முகநூலை தலைவர் அக்கறை காட்டவில்லை என்றதற்கு நான் கண்டனம் தெரிவிக்கின்றேன் என்றால் அதனை உடனடியாக எடுப்பேன். அவ்வாறு அவரிடம் நேசம் வைத்திருக்கின்றேன். நீங்கள் மட்டும் நேசிக்க வேண்டும் என்பது இல்லை எனது உள்ளத்தில் நேசம் என்பது எனக்கு தெரியும்.

குழுக்களை அமைக்குமாறு நான் கோரியிருந்தேன் ஆனால் தலைவர் அக்கறை காட்டவில்லை. இக் குழுக்கள் இருந்தால் இவ்வாறு செய்திருக்கலாம் என்றுதான் நான் இவ்விடயத்தை கொண்டு

வந்தேன். அதாவது என்னால் 2019.07.19 ஆந் திகதி சமர்ப்பிக்கப்பட்ட Proposal to Council Meeting Pradeshiya Sabha to Appoint Committee என்னும் தலைப்பில் இது சபையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட விடயம் அதற்கான ஆரம்பகட்ட வேலைகள் பட்டியல் எடுக்கப்பட்டது. இந்த சபையால் கௌரவ உறுப்பினர் யூசுப் லெப்பை அவர்கள் கூறியது போல் பட்டியல் எடுக்கப்பட்டது. அந்த பட்டியலை அமுல்படுத்தவில்லை. இந்த தருணத்திலாவது அதை அமுல்படுத்துமாறு கௌரவ தவிசாளர் அவர்களை கேட்டுக்கொள்கின்றேன்.

இவ்வாறு தமிழில் தெளிவின்மையால் எங்களுடைய கௌரவ உறுப்பினர்கள் நான் கூறப்பட்ட மாதிரி கௌரவ உறுப்பினர் றியாஸ், கௌரவ உறுப்பினர் ஜிப்ரி, கௌரவ உறுப்பினர் சஹீல், கௌரவ உறுப்பினர் யூசுப்லெப்பை, கௌரவ உறுப்பினர் இன்பவதி, கௌரவ உறுப்பினர் சரீபா, கௌரவ உறுப்பினர் நளீம், கௌரவ உறுப்பினர் நஜீம், கௌரவ உறுப்பினர் கோவிந்தசாமி, கௌரவ உறுப்பினர் வளர்மதி, கௌரவ உறுப்பினர் பௌசுள்ளாஹ், கௌரவ உறுப்பினர் நிலுவ்பா ஆகியோர் உங்களுக்கு தெளிவில்லாவிட்டால் என்னிடம் அழைப்பின் மூலம் அல்லது Whatsapp இன் மூலம் என்னிடம் நீங்கள் இதற்கு விளக்கம் கேட்டிருக்கலாம். உங்களுக்கு அந்த வார்த்தைப் பிரயோகம் விளங்கவில்லை என்று, அதற்கு நான் உங்களுக்கு விளக்கம் தந்திருப்பேன். நீங்கள் என்னை பிழையாக விளங்கிக் கொண்டிருக்கின்றீர்கள்.

அடுத்தது மேற்பார்வைத் திட்டம், இது நான் அதிகளவான Workshop க்கு போயிருக்கின்றேன்., அதிகளவான புத்தகங்களை வாசித்திருக்கின்றேன். நீங்கள் தந்த கை நூல்களையும் வாசித்திருக்கின்றேன். அந்த கைநூலில் தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பாக உரியவரை அணுகி மேற்பார்வை செய்வது என்பது உறுப்பினர் ஒருவரின் வகிபங்காகும். இது Ministry of Provincial Councils and Local Government Srilanka Institute of Local Governance இனால் வெளியிடப்பட்ட Concil Member Hand Book இல் 84 வது பக்கத்தில் உள்ளூராட்சி நிறுவனங்களின் உறுப்பினர்களின் வகிபங்கு எனும் தலைப்பில் இவ்விடயம் 9இல் குறிப்பிடப்பட்டுள்ளது. அதே மாதிரி சென்ற மாதம் கௌரவ தவிசாளர் அவர்களால் எங்களுக்கு கிடைக்கப்பட்ட Roles and Responsibilities of Public representative for good Local Governance விடயம் சம்மந்தமாக உள்ளூராட்சி சபைகளுக்கு தெரிவு செய்யப்பட்ட மக்கள் பிரதிநிதிகளுக்கான பயிற்சிப் பட்டறை கைநூலின் 24வது பக்கத்தில் குறிப்பிடப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்களின் வகிபங்கும் பொறுப்பும் என்ற தலைப்பின் கீழ் தீர்மானம் எடுத்தல், அதை நடைமுறைப்படுத்தல் சம்மந்தமாக தெளிவாக கூறப்பட்டுள்ளது.

2020.05.05 ஆந் திகதி கொரோனா வைரஸ் காரணமாக இப் பிரதேச சபையின் செயலாளர் ஊடாக இங்கு ஒரு Whatsapp Group தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த Whatsapp Group இல் 2020.05.05 ஆந் திகதி நான் Work Plan அதாவது மேற்பார்வைத் திட்டம் என்று ஒரு Time Table போட்டிருந்தேன். நான் வைத்தியசாலைக்கு சென்ற திகதி 2020.05.07 இது பிழையாக இருந்தால் நான் இந்த அரசியல் பயணத்தில் Pre School மாணவி. கௌரவ தவிசாளர் அவர்களே, மன்னிக்க வேண்டும். நீங்களும் இதில் கவனம் எடுத்திருப்பீர்கள், எங்களது செயலாளர் அவர்களும் கவனம் எடுத்திருப்பார்கள், எங்களுடைய சக உறுப்பினர்களும் கவனம் எடுத்திருப்பார்கள். எனக்கு அறியாமல் செய்திருந்தால் நீங்கள் அதற்கு வழி கோரிருக்கலாம்தானே இவ்வாறு இல்லை இப்படி என்று, அதுவும் அந்த தருணத்தில் செய்யவில்லை. நான் 2020.05.07 ஆந் திகதி நான் செயலாளரிடம் சொன்னேன் இது தொடர்பான தீர்மானங்கள் எடுத்தோம், அது தொடர்பாக உங்களுக்கு ஏதாவது கடிதங்கள் வைத்தியசாலையில் இருந்து வந்ததா என்று கேட்ட போது செயலாளர் சொன்னார் எந்த அனுமதிக் கடிதமும் வரவில்லை என்று, அதற்கு நான் சொன்னேன் அனுமதிக் கடிதம் இல்லாமல் இதைப்பற்றி தீர்மானம் எடுக்கப்பட்டிருந்தால் அனுமதிக்கடிதத்தை வைத்திய அத்தியட்சகரிடம் கேட்கவில்லையா என்று கேட்டேன். அது சம்பந்தமாக கதைத்தேன் இன்னும் வரவில்லை என்று சொன்னார். நான் சொன்னேன் வேறு விடயமாக வைத்தியசாலைக்கு செல்ல வேண்டி இருக்கின்றது அதனோடு நான் வைத்திய அத்தியட்சகரை சந்தித்து இது தொடர்பாக கேட்டு வருகின்றேன். அச் சந்தர்ப்பத்தில் செயலாளர் அவர்கள் கடிதங்கள் தந்தால்

நமக்கு உதவியாக இருக்கும். பார்வைக்கு வருபவர்களிடம் காட்ட முடியும் என்ற கருத்தையும் சொன்னார்.

அதையும் நான் ஏற்றுக்கொண்டு பின்னர் எமது கௌரவ உறுப்பினர் இன்பவதியுடன் அழைப்பின் ஊடாக நான் அவரிடம் கேட்டேன் வைத்திய அத்தியட்சகரை சந்திக்க வரப்போகின்றேன் நீங்களும் என்னுடன் வருகிறீர்களா என்று கேட்டேன். அந்த நிமிடம் எங்களுடைய கௌரவ உறுப்பினர் இன்பவதி கூறிய விடயம் என்னவென்றால் வைத்திய அத்தியட்சகர் மேலுக்குதான் இருக்கிறார். நீங்கள் வந்து சந்திக்கலாம் ஆனால் நான் Duty இல் இருப்பதனால் எனக்கு வர முடியாது என்று சொன்னார். அதன் பிறகு நான் அந்த இடத்திற்கு சென்றேன். அந்த நேரம் எமது கௌரவ உறுப்பினர் சரீபா அவர்களும் அதற்குள் இருந்தார். அது அவர் வேலை செய்கின்ற இடம் நான் குறை கூறவில்லை. நான் வைத்திய அத்தியட்சகரிடம் சம்மாந்துறை பிரதேச சபையில் இருந்து கௌரவ உறுப்பினர் சிஹாமா வந்திருக்கின்றேன். நாங்கள் தீர்மானம் ஒன்று எடுத்திருக்கின்றோம். நாங்கள் உங்களுக்கு செய்ய வேண்டும் என்ற பிரேரணை வந்ததால் நாங்களும் அந்த தீர்மானத்திற்கு ஒப்புக் கொண்டதால் நாங்கள் ஒரு பொறுப்புதாரியாக இருக்கின்றோம். அது தொடர்பாக கேட்டு வந்திருக்கின்றோம் என்றுதான் கூறினேன்.

அதில் நான் கலந்துரையாடல் நடைபெறும் போது எமது கௌரவ உறுப்பினர் சரிபா அவர்கள் இடையூறு செய்தார். நான் அந்த நேரமும் என்னுடைய Habits ஐ மாற்றாமல் அவருடைய கதையை கேட்டு, அவரிடம் நான் சொன்னேன் நீங்கள் அவ்வாறு கேட்டிருக்கீர்கள் ஆனால் நீங்கள் கடிதத்தை கொடுங்கள் என்று சொன்னதற்கு அவர் என்னிடம் கூறினார் கடிதம் தந்து விட்டேன் என்று கூறினார். அதற்கு எமது கௌரவ உறுப்பினர் சரிபா அவர்கள் கடிதம் கௌரவ தவிசாளருக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்று கூறினார். நான் அறிந்தவை பிழை இருந்தால் மன்னிக்க வேண்டும் கௌரவ தவிசாளருக்கு கடிதம் வந்தால் அது செயலாளருக்கு தெரியவரும். வைத்திய அத்தியட்சகர் உங்களுக்கு Copy தரவா என்று கேட்ட போது இல்லை அதற்கு பொறுப்புதாரி கௌரவ உறுப்பினர் சரிபா அவரிடமே கொடுங்கள் என்று நான் அவ்விடத்தில் மனாசாட்சியாக கதைத்துவிட்டு வந்தேன். அதன் பிறகு ஒரு தரம் வைத்திய அத்தியட்சகர் அழைப்பின் ஊடாக நீங்கள் Photo எடுத்தயா என்று கேட்டார். நான் அதற்கு Photo எடுத்தேன் என்று கூறினேன். அது இருட்டாக இருக்கின்றது என்று என்னிடம் 2,3 பேர் கேட்டார்கள் என்றார். அதற்கு நான் உங்களுக்கு இதில் ஏதாவது பிரச்சினையா என்று கேட்டதற்கு அவர் இல்லை என்று சொன்னார்.

இச் சந்தர்ப்பத்தில் இன்னுமோர் விடயத்தை கூற விரும்புகின்றேன். கௌரவ உறுப்பினர் சரீபா அவர்கள் இந்த தீர்மானம் சம்மந்தப்பட்ட கொள்வளவில் ஏற்கனவே ஈடுபட்டுள்ளதாகவும், அக் கொள்வனவுக்கான ஒரு அமைப்பை ஏற்கனவே தெரிவு செய்ததாகவும் அக் கலந்துரையாடலின் போது தெரிவித்தார். ஆனால் இக் கலந்துரையாடல் மிகவும் சிறப்பாகத்தான் நடந்தது. கௌரவ உறுப்பினர் றியாஸ் உட்பட ஏனைய கையொப்பம் இட்ட உறுப்பினர்கள் இப் பிரேரணையில் அரசாங்க உத்தியோகத்தர்களை ஏமாற்றியதாகவும், கடமை நேரத்தை வீணடித்ததாகவும் அவர்களின் அறியாமையினால் ஒரு பொய்யான குற்றச்சாட்டை இப் பிரேரணையில் வைத்திருக்கிறார்கள் இதற்கு எங்களுடைய கௌரவ தவிசாளர் அவர்கள் இதை நீங்கள் விளங்கி கட்டாயம் கண்டனம் தெரிவிக்க வேண்டும்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்களே, இவ்வளவு நேரமும் பேசியதில் அடிப்படை என்னவென்றால் உங்களுக்கு எதிராக வைக்கப்பட்ட குற்றச்சாட்டு என்ன என்று நீங்களே விளங்கவில்லை. அதுதான் பிரச்சினை. இதில் நீங்கள் எவ்வளவோ விளக்கம் தந்தாலும் இதில் பிரச்சினை நீங்கள் எடுத்த முயற்சியில் இல்லை. நீங்கள் பிரதேச சபையின் நடவடிக்கைகளை ஒரு பிரதேச சபையின் கௌரவ உறுப்பினராக இருந்து கொண்டு Social Media வில் விமர்சிப்பது தான் பிழை. அது பிழை என்று நீங்கள் இன்னமும் உணரீர்கள் இல்லை. நீங்கள் சொல்கிறீர்கள் நான் இப்படித்தான் செய்தேன் என்று, நீங்கள் அப்படி சொல்ல இயலாது. அதைத்தான் இவர்கள் திணிக்கிறார்களே தவிர நீங்கள் இது செய்யவில்லை அது செய்யவில்லை என்பதல்ல பிரச்சினை. தாராளமாக எல்லோரையும் விட செயற்திறன் உடையவள் என்று எல்லோருக்கும் தெரியும். உங்களுக்கு அதற்கு பக்கபலன் இருக்கு என்பதும் தெரிந்த விடயம். பிரதேச சபையின்

நடவடிக்கைகளை ஒரு கௌரவ உறுப்பினர் கூட்டுப்பொறுப்புள்ள ஒரு உறுப்பினர் தனிப்பட்ட முகநூலில் விமர்சிப்பது கண்டனத்துக்குரிய விடயம் என்பதுதான் இந்தப் பிரேரணையின் அடிப்படை கருத்து.

**கௌரவ உப தவிசாளர் ஏ.அச்சி முஹம்மட் அவர்கள்:**
கௌரவ தவிசாளர் அவர்களே, கௌரவ உறுப்பினர் சிஹாமா அவர்கள் கொடுத்த விளக்கம் என்னவென்றால் ஏனைய உறுப்பினர்கள் எல்லோரையும் தாக்கி இருக்கின்றது என்ற விடயத்தை உணர வேண்டும். இவ்வளவு பாசம் பற்றுள்ள கௌரவ தவிசாளர் அவர்களுக்கும் தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கின்றது. எனவே கௌரவ உறுப்பினர்கள் அனைவரிடமும் வேண்டிக் கொள்வது மறப்போம் மன்னிப்போம் என்ற வாசகத்திற்கு அமைவாக இந்த சபையில் இந்தப் பிரச்சினையை நீடித்து கொண்டு செல்லாமல் எங்களது கௌரவத்திற்கும் அதற்கும் மேலான கௌரவ தவிசாளர் அவர்கள் இவ் விடயத்தை முடித்து வைக்குமாறு மிகவும் தாழ்மையுடன் வேண்டிக் கொள்கின்றேன்.

**கௌரவ தவிசாளர் அவர்கள்:**
தான் குற்றம் செய்யவில்லை என்று மீண்டும் மீண்டும் கூறுவது ஒரு அர்த்தமற்ற விடயம். அவருக்கு இந்த சபை சார்பில் நான் சொல்லும் புத்திமதியும், அறிவுறுத்தலும் மீண்டும் ஒரு முறை பிரதேச சபை உறுப்பினராக இருந்து கொண்டு சபையின் நடவடிக்கைகளைப் பற்றி சமூக வலையங்களில் மாற்றுக் கருத்துக்கள் கூறுவீர்களானால் இந்த சபை அதை மிகவும் வன்மையாக கண்டித்து அதற்குரிய நடவடிக்கை எடுக்கும் என்பதை தெரிவித்ததோடு, சபையின் அமர்வினை இனிதே முடித்துக் கொள்கின்றேன்.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.

AM.முஹம்மட் நௌசாட்
தவிசாளர்
சம்மாந்துறை பிரதேச சபை.